CC-O. In Public Domain. Digitized by eGangotri

சிருங்கேரி நாயகருக்கு சிங்கார ஆரத்தி



பாரதி காவலர் டாக்டர் கே. ராமமூர்த்தி

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

श्री श्री जगद्गुरु शङ्कराचार्य महासंस्थानम्
दक्षिणाम्नाय श्री शारदापीठम्. शृङ्गेरी

V.R. GOWRI SHANKAR
B.E.. D.I.I.Sc., AMIMA
Administrator
Sri Sringeri Math &
its Properties
SRINGERI-577 139.
(Karnataka)

Ref No. 1636

Camp: Sringeri

Date: 11-6-1993

Dear Dr. Ramamurthi,

I am very happy that you are preparing an epic-poem describing the greatness of our Jagadguru Sri Sri Bharathi Theertha Mahaswamiji and the Unique Throne that He is adorning.

The epic-poem in eleven chapters, includes many historical events, has been written in a very appealing manner.

I wish that this publication of 'Bharathi Kaavalar' receives a good response from all the readers and would act as a source of disseminating the message of His Holiness.

Asirmanthrakshathas and Sri Sharada Chandramouliswara Prasadams Blessed by His Holiness are enclosed.

With regards,

Encl : Prasadams

Yours sincerely,

(Sd)

(V.R. GOWRI SHANKAR)

'Bharathi Kaavalar'
Dr. K. RAMAMURTHI
3, Krishnaswami Street.
Abiramapuram.
Madras-600 018- T.N.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சிருங்கேரி நாயகருக்கு சிந்தூர ஆரத்தி

குருபக்தி இலக்கியத்தின்
முதலாவது சிறு காவியம்

பாரதி காவலர்
டாக்டர் கே. ராமமூர்த்தி

சங்கர பாரதி
3, கிருஷ்ணசுவாமி தெரு,
அபிராமபுரம்,
சென்னை-600018.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

முதற்பதிப்பு : ஜூன், 1993
CC-O. In Public Domain. Digitized by eGangotri
(C) உரிமை : ஆசிரியருக்கு

Prce : Rs 6-00

Sringeri Naayakarukku
Chinthoora Aarathi (in Tamil)
Epic Poem on
Sri Jagadguru Shankaracharya
H. H. Sri Bharathi Theertha Swamigal
of Dakshinamnaya Sri Sharada Peetam.

Author :
Dr. K. RAMAMURTHi,

Published By :
SANKARA BHARATHI
3, Krishnaswamy St.,
Abiramapuram, Madras-600018.
Phone : 456892

முகப்பு ஓவியம் : **P. N. ஆனந்தன்**

அச்சிட்டோர் :

ஸ்ரீ குருராஜா அச்சகம்,
நெ. 7, சின்னப்ப ராவுத்தர் தெரு,
சென்னை-5.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

श्री श्री जगद्गुरु शङ्कराचार्य महासंस्थानम्
दक्षिणाम्नाय श्री शारदापीठम्. शृङ्गेरी

சிருங்கேரி
12—3—1993

அருளாசி

டாக்டர் ஸ்ரீ கே. ராமமூர்த்தி அவர்கள்
3, கிருஷ்ணசாமி தெரு,
அபிராமபுரம், சென்னை-600018.

தாங்கள் இயற்றிய ''சிருங்கேரி நாயகருக்கு சிந்தூர ஆரத்தி'' என்ற தமிழ் பாமாலை நூலாக வெளியிட முன் வந்துள்ள விஷயத்தை ஜகத்குரு ஸ்ரீ மஹா ஸ்வாமிகளிடம் தங்கள் நமஸ்காரங்களுடன் ஸமர்ப்பித்தோம்.

குருபக்தி இலக்கியத்தின் முதலாவது சிறுகாவியமாகிய இந்த நூலைப் படிக்கும் ஒவ்வொருவர் உள்ளத்திலும் சிருங்கேரி ஸ்ரீ ஆச்சார்யாள் சரணாரவிந்தங்களில் பக்தியும், சிருங்கேரி க்ஷேத்ர மஹிமையும் உணர்ந்து, அனைவரும் ஸகல ஸௌபாக்யங்களுடனும் ஸகல ஸ்ரேயஸுடனும் வாழ்ந்து வர உதவியாய் இருக்குமென ஸ்ரீ ஆச்சார்யாள் ஆசீர்வதித்தார்.

இத்தகைய பக்தி காரியங்களில் ஈடுபடும் தாங்கள், தங்கள் குடும்பத்துடன் ஸகல ஸௌபாக்யங்களையும் தீர்க்காயுளையும் பெற வேண்டுமென ஸ்ரீ ஆச்சார்யாள் ஆசீர்வதித்தருளிய மந்த்ராக்ஷதையும் ஸ்ரீ ஸாரதா சந்த்ர மௌளீஸ்வரர் ப்ரஸாதமும் இத்துடன் அனுப்புகிறோம்.

இப்படிக்கு
T. தக்ஷிணாமூர்த்தி
(கையொப்பம்)
Private Secretary To H. H. Sri Jagadguru

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பொருளடக்கம்

அருளாசி

வாழ்த்து-மதிப்புரை-அணிந்துரை

என்னுரை

1. அனந்த சத்யானந்தம் (கடவுள் வாழ்த்து) 19

2. நதிகளின் சங்கமம் (பாயிரம்) 22

3. சிறியவனின் ஆசை (அவையடக்கம்) 25

4. பூமித்தாய் ,, ,, 27

5. தொன்மையின் சின்னம் ,, 31

6. சிந்தூர விடியலில் சூரிய ஜனனம் ,, 42

7. பண்டித ராஜ குருநாதர் ,, 47

8. ஸ்ரீ பாரதீ தீர்த்த பகவான் பட்டாபிஷேகம் ,, 52

9. தக்ஷிணத் திரிவேணி ,, 61

10. குரு தரிசனம் ,, 66

11. குரு அருள் பொலிக (மங்களம்) ,, 77

பொருள் விளக்கமும் குறிப்புக்களும் ,, 79

நூலாசிரியர் பற்றி ,, 94

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தமிழ்ப் பல்கலைக் கழகம்

தஞ்சாவூர்

துணைவேந்தர்

டாக்டர் ஔவை நடராசன்

அவர்களின்

வம்மினோ !
நாமெடுப்போம் வாழ்த்து.

அரங்கேறும் தெய்வ நலத்தை அன்பார்
சிருங்கேரி நாயகரைச் சிந்தை—ஒருங்குறவே
காவியமாய் பாரதி காவலனார் ஆக்கியதை
ஓவியமாய்க் கண்டோம் உணர்ந்து.

பாரதி பாக்களெலாம் பாங்காகக் கற்றமகன்
சாரதா பீடத்தின் சான்றோரை—நேராகப்
பார்த்துப் பழகிப் பணிசெய்து காப்பியமும்
சேர்த்தார் கழற்கே செறிந்து.

மெய்யாம் வரலாறு மேலாம் தவஞானம்
ஐயர் புகழதனை ஆன்மாக்கள்—உய்யவே
செய்தார் கவிக்கோமான் சிந்துர ஆரத்தி
கையா லெடுத்தார் கனிந்து.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பன்மொழியும் கற்ற பரமரிவர்; தம்பணியால்
நன்மொழிகள் நற்சிந்தை நற்செயல்கள்-
மன்பதைக்கே
கூட்டுதற்கு வந்த குருதேவர் காவியத்தை
நாட்டார்கள் கற்றிடுக நன்கு.

தவவடிவம்; சாந்தம்; திருச்சீலம்; நமது
பவத்தை அறமாக்கும் பண்பார்—சிவவுருவம்
சிருங்கேரிச் செல்வம் சிறுகாப் பியத்தில்
குறுநகை செய்யும் குளிர்ந்து.

காவியா தர்சக் கவினார் இலக்கணத்தை
மேவி எழுந்த வித்தக—ஓவியத்தைச்
சீவன் படித்தேறி சிவமாய்ப் பொலிவடைய
நாவன்மை தந்ததே நன்கு.

சிருங்கேரி நாயகர்க்குச் சிந்தூரச் சுற்று
வருங்காலம் எல்லாமே வாழ்த்தத்—தருங்கவிஞர்
நம்மிராம மூர்த்தி நலமெல்லாம் பெற்றோங்க
வம்மினோ நாமெடுப்போம் வாழ்த்து.

4-6-93 ஔவை நடராசன்
தஞ்சாவூர்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சென்னைப் பல்கலைக் கழகம்

தமிழ் மொழித்துறைத் தலைவர்
டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்

அவர்கள் வழங்கிய

மதிப்புரை

பாரதி காவலர் டாக்டர் கே. இராமமூர்த்தி அவர்கள் நாடறிந்த நல்ல பேச்சாளர்; சிறந்த எழுத்தாளர்; சமூகத் தொண்டர்; நாளும் நட்பை இலக்கியமாக வளர்த்து வரும் இனிய நண்பர். ஆன்மீகத்தில் தோய்ந்த ஈடுபாடும் அருளியலில் பெரும் ஈடுபாடும் கொண்டவர். நூல்கள் பல எழுதி அன்னைத் தமிழிற்கு அருமைத் தொண்டு ஆற்றி வருகிறார்,

''சிருங்கேரி நாயகருக்குச் சிந்தூர ஆரத்தி'' என்னும் இனிய தலைப்பில் சிருங்கேரி சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த பகவான் அவர்கள் பேரில் ஒரு சிறு காப்பியம் ஒன்று புனைந்துள்ளார். குரு பக்தி இலக்கியத்தில் முதலாவது சிறு காப்பியமாக இந்நூல் முகிழ்த்துள்ளது,

'அனந்த சத்யானந்தம்' என்று தொடங்கி, 'குரு அருள் பொலிக' எனப் பதினோரு தலைப்புகளில் இச்சிறு காப்பியம் சிறப்புடன் அமைந்துள்ளது. வரலாற்றுச் சான்றுகளுடன் அமைதியாக, நீண்டு சென்று கதை போல முன்னேறும் பாங்கு காவியப் பண்பாகவும் அமைந்துள்ளது.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

காப்பியத் தலைவரின் பிறப்பு முதல் பட்டாபிஷேகம், அருள் பாலிப்பு வரை விளக்கிச் செல்லும் இச்சிறு காவியத்தில் மலை, நகர், நதி, நாடு, இரு சுடர்த் தோற்றம் முதலான வருணனைகள் தண்டியலங்காரம் இயம்பியவாறே அமைந்திருக்கக் காணலாம். பல்வேறு சந்தங்கள் பா நடைக்குச் சுவை சேர்க்கின்றன. பெருங்காவியப் பண்புகள் இந்நூலில் நிறைந்துள்ளன.

இனி, இச்சிறு காவியத்தில் நெஞ்சைத் தொடும் சில பாவடிகளைக் காண்போம்.

'மண்ணும் நீரும் நெருப்பும்
விண்ணும், வாழ்வின் உயிர்நிலைக் காற்றும்
மூலக்கூறுகள் ஐந்தின்
ஆட்சியே இப்பிரபஞ்சச் சுழற்சி'

என்ற காவிய வரிகள் கவினுற அமைந்திருக்கின்றன. 'காலச்சக்கரம் சுழல்கிறது; மானுடம் அங்கே உழல்கிறது'' என்ற வரிகள் (பக்கம் 42) நடப்பு உலகைப் படம் பிடித்துக் காட்டுகிறது. 'அறிந்தும் அறியாமலும், உணர்ந்தும் உணராமலும்' எனத் தொடங்கும் எட்டு வரிகளும் (பக்கம் [illegible]) இறை உணர்வை மானுட உலகம் முழுவதிற்கும் பொதுமைப்படுத்தி புதுநெறியாகப் பளிச்சிடுகிறது.

நதிகளைப் பற்றிய வரலாறு நயமான பாட்டுவரிகளாக அமைந்துள்ளன.

தீர்த்தஹல்லியைத் தாண்டியே பாயும்
காடுகளின் ஊடே வேகமாய் ஓடும்
மூங்கில் புதர்களைத் தழுவிச் சாடும்
மலையிலும் நிலத்திலும் பாங்குடன் ஓடி
மலர்களை அணைத்து மணமுடன் ஓடி
கூடலி தன்னில் பத்ராவுடன் கூடி
குலவி ஒன்றாய் தானே சேரும் (பக். 38)

ஒவ்வொரு தலைப்பிலும் நிறைவு வரிகளாக உள்ள

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

''காலடிச் சீர் வழங்கும் வள்ளலுக்கு
கவிக்கோலம் போடுகின்றேன்
எங்கள் சிருங்கேரி நாயகருக்கு
எடுக்கின்றேன் சிந்தூர ஆரத்தி''

என்ற நான்கு வரிகளும் இந்தக் காவியத்தின் சிறப்பிற்கு ஏற்றமாக அமைந்து உள்ளன.

இச்சிறு காவியத்தை பாரதி காவலர் டாக்டர் கே. இராமமூர்த்தி அவர்கள்தான் இயற்றினாரா என்று வியக்கும் அளவிற்குச் சொற்பிரயோகங்கள் பல அமைந்துள்ளன. சான்றுக்கு ஒன்றைக் காணலாம்.

சித்திரை மாதப் புதுநிலவோ
சித்திர வித்தக முத்தமிழோ
தத்துவ சத்திய சமஸ்கிருதமோ
இத்தரை மீது
முத்திரை பதித்த
நித்திலமோ—குருமணி
ரத்தினமோ

(பக்கம் 59)

ஓர் ஆன்மீக ஆவேசம் வந்து குருபக்தி நிறைந்த இச் சிறு காவியத்தை நண்பர் இராமமூர்த்தி புனைந்துள்ளாரோ என்றே தோன்றுகிறது. கவி வாழ்க; காவியம் வெல்க; வாழ்த்துக்கள்.

சென்னை
28-5-93

கி. பாலசுப்பிரமணியன்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சென்னை ஸம்ஸ்கிருதக் கல்லூரி

பிரின்ஸ்பால்

டாக்டர் கே. வி. சேஷாத்ரிநாத சாஸ்திரி

சாஹித்ய விசாரத, தர்சன ஜோதிஷ பராங்கத
வேதாந்த, சாஹித்ய, ஆயுர்வேத சிரோமணி

அவர்கள் வழங்கிய

அணிந்துரை

'சிருங்கேரி நாயகருக்கு சிந்தூர ஆரத்தி' என்ற காவ்யத்தின் நாமகரணம் ஜகத்குருவின் ஆராதனை வடிவில் கவிதை அமைந்திருப்பதை சுட்டிக் காட்டி, ஸௌந்தர்ய லஹரியில் நூறாவது ச்லோகமான

ப்ரதீப ஜ்வாலா பி:
திவ ஸகர நீராஜன விதி :

என்ற சூரிய ஜோதியை நினைவூட்டுகிறது.

காவ்யத்திற்குப் பெருமை அதில் கையாளும் நாயகரால் அளவிடப்படுகிறது. ராம பிரானால் ராமாயணத்திற்குப் பெருமை; கிருஷ்ண பரமாத்மாவால் பாரதத்திற்கும் பாகவதத்திற்கும் பெருமை; அதைப் போல் ஸ்ரீ ஜகத்குரு வழி வந்த சாரதா பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ பாரதீ தீர்த்த ஸ்வாமிகள் காவ்ய நாயகராகத் திகழ்வதால் இந்நூலின் பெருமை இரட்டிப்பாகிறது.

ஸ்ரீ முகத்தில் ஆரம்பித்து குரு முகதர்சனத்தில் முடிக்கும் 'உபக்ரமோபஸம்ஹார' ஒற்றுமையால் சாஸ்திர காவ்யமாகவும் பாரதி காவலர் டாக்டர் கே. ராமமூர்த்தி

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இயற்றி உள்ள இந்நூல், பதினோரு அத்தியாயங்களில் ஒளிர்கிறது. அடக்கத்தை வெளியிடுவதில் மகாகவி காளிதாஸரை இக்காவ்ய ஆசிரியர் நினைவுபடுத்துகிறார். காளிதாஸரின் ரிதுஸம் ஹாரம், குமாரஸம்பவம் முதலிய நூல்களின் நிழலாட்டம் இவரது காவ்யத்தில் காண்பது சிறப்பாகும்.

ஸம்ஸ்கிருத இலக்கியங்களில் மஹாகாவ்ய லக்ஷணங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவற்றை கவனமோடு பின் பற்றி இக்காவ்யத்திலும் சூர்யோதயாதி வர்ணநங்கள், பொருத்தமான அணிகள், கருத்துப் பொதிந்த அர்த்தாந்தர ந்யாஸங்கள், நீதியைப் புகட்டும் நல்லுரைகள், உசிதமான இடங்களில், கதை ஓட்டத்திற்கும் சுவைக்கும் விருவிருப்பூட்டும் விதத்தில் வர்ணனைகளைக் கையாண்டு காவ்யத்தை பாரதிகாவலர் ராமமூர்த்தி நடத்திச் செல்லும் பாங்கு அற்புதமாக அமைந்திருக்கிறது. விருத்த பேதங்கள் காவ்யச் சுவையை மிகுதியாக்கி ஹ்ருதயத்தை தொடுவதாக அமைந்துள்ளன.

"கடுகௌஷதவத் சாஸ்த்ரம் அவித்யாவ்யாதிநாசனம்;
ஆஸ்வாத்யம்ருதவத் காவ்யம் அவிவேகி கதாபஹம்"

மருந்தை விரும்பி உட்கொள்வதில்லை. ஆனால் அது உடலுக்கு உரமூட்டுகிறது. சாஸ்த்ரம் அஞ்ஞானத்தை அகற்றுகிறது. ஔஷதம் போலும் செயல்படுகிறது. அறியாமையை அகற்றும் காவ்யம் அம்ருதம் போல் விரும்பி ஏற்றுக்கொள்ளப்படுகிறது. சிருங்கேரி நாயகருக்கு சிந்தூர ஆரத்தி காவ்யம் அவ்வாறு இருக்கிறது.

ஹிதமாகவும் மனதுக்குப் பிடித்தமாகவும் இருக்கும் வார்த்தைகள் அரிது. "ஹிதம் மனோஹாரி ச துர்லபம் வச:" என்கிற பாரவியின் சொல்லை பாரதி காவலர் நயமாக்கி இரண்டையும் ஒரே இடத்தில் சாத்யமாக்கி விட்டார் தனது படைப்பின் வாயிலாக. இந்தக் காவியத்தில் ஆசிரியர் ராமமூர்த்தியின் படைப்புகள் ஹிதமாகவும்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மனத்தைப் ஈர்க்கும் வகையிலும் அமைந்து இருப்பது கவி இலக்கணத்திற்கு உதாரணமாகவே திகழ்கிறது. சங்கீதமும் சாஹித்யமும்கூட கைகோர்த்துச் செல்கின்றன.

இவரது புலமையை நினைக்கும்பொழுது காளிதாஸனின் வாக்கு ஞாபகத்திற்கு வருகிறது ''ஸாதாரணோ பூஷண பூஷ்யபாவ :''

ஸ்ரீமுக வருஷத்தில் டாக்டர் ராமமூர்த்தி இயற்றிய இக்காவியம் ஸ்ரீமுகமாக (லக்ஷ்மீ கடாக்ஷத்தின் தோற்றமாக) அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கது. ஸ்ரீ என்ற சொல்லுக்கு லக்ஷ்மீ என்று பெயர். அவளுடைய முகம் ஆரம்பம் என்று பொருள். சிருங்கேரி சாரதா பீடாதிபதி மஹா ஸன்னிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த ஸ்வாமிகளின் ஸ்ரீ முகம் காவ்ய வடிவில் ராமமூர்த்தி வாயிலாக வெளி வந்தது போல் காவ்யம் அமைந்திருப்பது அவரது பூர்வ புண்யத்தை உணர்த்துகிறது. இதனை ஒரு ஸ்ரீமுக காவ்யம் என்று அழைப்பது பொருத்தமுடையதாகும்.

தற்காலச் சூழ்நிலையில், சாஸ்த்ரம், ஸம்பிரதாயம், அறிவு. பக்தி முதலிய நூல்களை படிக்கும் இளையவர்கள் அரிதாகத் தென்படுகிறது அவர்களை நல்வழிப்படுத்த இந்த வகையிலான நூல்கள் பயன்படுவது திண்ணம். ராமர் செயல்முறையில் உலகுக்கு தர்மத்தைப் போதிக்கிறார். ''பரகுண பரமாணூன் பர்வதீக்ருத்ய நித்யம் நிஜஹ்ருதி விகஸந்த; ஸந்திஸந்த: கியந்த?'' என்ற பர்த்ருஹரி வாக்கை இவர் காவ்யமியற்றி செயல்படுத்துகிறார்.

இன்னும் பல அரிய நூல்களை டாக்டர் ராமமூர்த்தி இயற்றி, அவை வெளிவந்து, ஸமுதாயத்தைச் சீர்படுத்தப் பயன்பட வேண்டுமென்று ஸ்ரீ ஜகத்குருவை ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்து அணிந்துரையை நிறைவு செய்கிறேன்.

15—1—93 கே. வி. சேஷாத்ரி நாத சாஸ்திரி
சென்னை

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

என்னுரை

குரு ஸ்வரூபிணி, வாக்தேவி, ஸ்ரீசாரதாம்பாள் கிருபையாலும், சிருங்கேரி ஸ்ரீசாரதாபீடாதிபதி ஸ்ரீஜகத் குரு ஸ்ரீசங்கராசாரிய ஸ்வாமிகள் ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்களின் பெரும் கருணையினாலும், சிருங்கேரி நாயகருக்கு சிந்தூர ஆரத்தி என்னும் குருபக்தி இலக்கியத்தின் சிறுகாவியத்தை எளியேன் இயற்றி குரு அருள் பெறுகிற பேறு கிடைத்ததை எண்ணி எண்ணி மெய் சிலிர்க்கிறேன்.

காவியங்கள் உலகின் எல்லா மொழிகளிலும் உள்ளன. வேதவியாசரின் மகாபாரதமும் வால்மீகி இராமாயணமும் காளிதாசரின் ரகுவம்சம் சாகுந்தலம் முதலியனவும் சிலப்பதிகாரம், வளையாபதி குண்டலகேசி, சீவக சிந்தாமணி, மணிமேகலை ஆகிய ஐம்பெரும் தமிழ்க் காப்பியங்களும் கம்பனின் காவியமும் பிரசித்தமானவை.

கிரேக்கம் தொன்மையானது. ஹோமரின் Illiad, Odessyம், ரோமின் எழுச்சியைக் கூறும் வெர்ஜிலின் Aeneidம், பழமையான ஆங்கிலக் காவியம் Beowulf, பிரெஞ்சு மொழியில் உள்ள Chansans Degeste, போர்ச்சுகீசிய காவியமான The Lusiadsம், மில்டனின் 'பாரடைஸ் லாஸ்ட்' 'பாரடைஸ் ரீகைன்டு' ஆகியவையும் பிரசித்தமானவையாகும். இவை போன்றே இன்னும் பல காவியங்கள் என்னைப் பெரிதும் ஆட்கொண்டிருக்கின்றன. காவியங்களைச் சுவைப்பதிலும் ரசிப்பதிலும் எனக்கு இளம் பிராயத்திலிருந்தே ஆர்வம் மிகுதி.

காவிய இலக்கணங்களை தண்டியின் காவிய தர்சா விரிவாகக் கூறும். ஸம்ஸ்கிருத மொழியில் சொல்லப்பட்ட காவிய இலக்ஷணங்களையே பெரிதும் தழுவியவாறு ஆங்கில இலக்கிய மேதைகளான ஸி. எம். பௌரா ஆல்டஸ் ஹக்ஸ்லே இருவருமே தங்கள் கருத்தை தெரிவித்துள்ளனர். பொதுவாக, உலகக் காவியங்கள்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அனைத்துமே தண்டி அலங்காரத்தின் வழியே அமைந்துள்ளன எனலாம். ஆக, எளியேனின் இந்தக் காவியமும் அவ்வாறே ஆக்கப்பட்டுள்ளது.

சிருங்கேரி சாரதாபீடம் தொன்மையானது. 250 ஆண்டுகளுக்கு முன்பு சிருங்கேரி சாரதா பீடாதிபதி (27) ஸ்ரீ சச்சிதானந்த பாரதீ ஸ்வாமிகள் அருளாட்சிக் காலத்தில் காசி லக்ஷ்மணசாஸ்திரி ஸம்ஸ்கிருத்ததில் 'குருவம்ச காவ்யா' இயற்றி உள்ளார். 25வது பீடாதிபதி, ராமச்சந்திர மஹோதயகாவ்யகர்த்தா ஆவார்.

ஆக, இறைமையும் இயற்கையும் குருமகிமையும் சிருங்கேரியை என்னுள் காவியமாக்கி ஆட்கொண்டு விட்டது செங்கதிரும், சாரதாம்பாளும் சிருங்கேரி ஆசார்யாளும் அருள்பாலித்து, சிருங்கேரி நாயகருக்கு சிந்தூர ஆரத்தி காவியமாக உருவாகியது சிருங்கேரி ஜகத்குரு காலடியில் நின்று, பாமாலையாகப் படித்தபோது, ஸ்ரீ ஸ்வாமிகள் அருளிய பொன்னாடை, ஞானக்கதிர்களாகி, காவியமாக மலர்ந்துள்ளது.

குருபக்தி மிகுந்த திரு. ஆர். சுப்பிரமண்யன் (சுப்பாமணி) எளியேனைத் தம் வீட்டிற்கு அழைத்து, இக்காவியத்தை பூஜை அறையில் படிக்குமாறு பணித்து, தாமும அவருடைய குடும்பத்தினரும் கேட்டு மகிழ்ந்து என்னை ஊக்குவித்ததையும் அதைப் போன்றே, பல அன்பர்கள், நிறுவனங்கள், நூல் பிரசுரமாகப் பலவிதத்திலும் உதவியுள்ளதிற்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

எழுத்துத் துறையில் எனக்கு பல ஆண்டுளாக ஆதரவு அளித்து வருபவரும் குறிப்பாக நான் தமிழாக்கம் செய்த சங்கரரின் தோத்திரங்களையும் ஆய்வுக் கட்டுரைகளையும் அமுதசுரபி இதழ்களிலும், மலர்களிலும பிரசுரித்து உற்சாகம் தந்து பாராட்டி வருகிறவருமாகிய கலைமாமணி டாக்டர் விக்கிரமன் அவர்களுக்கு என்றும் நான்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

நன்றி உடையவனாவேன். சாரதாபீடப் பணிகளில் துணைபுரியும் திரு கீழாம்பூர் சங்கர சுப்பிரமண்யன், திரு பி. ஆர். விஸ்வநாதன் ஆகியோருக்கும் என் நன்றி. பாவடிவுகளை ஒப்புநோக்கி திருத்துவதில் என் இல்லத்தரசி கங்கா ராமமூர்த்தியின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

குருவின் அருளாசி வழங்கி திரு T. தக்ஷிணாமூர்த்தி அவர்கள் ஆதரித்துள்ளார்கள். தமிழ்ப் பல்கலைக் கழகத் துணை வேந்தரும் மிகச்சிறந்த அறிஞருமான டாக்டர் ஔவை நடராசன் அவர்கள், வெண்பாவில் வழங்கியுள்ள வாழ்த்து காவியத்திற்கு ஒரு அணி மகுடமாகத் திகழ்கிறது. சென்னை ஸம்ஸ்கிருதக் கல்லூரி பிரின்ஸ்பாலாக இருந்த சமயம் டாக்டர் கே. வி. சேஷாத்ரிநாத சாஸ்திரிகள் காவியத்தை வியந்து பாராட்டித் தந்துள்ள அணிந்துரை நூலுக்குச் சிறப்பளிக்கிறது. சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் சி. பாலசுப்பிரமண்யன் அளித்துள்ள மதிப்புரை ஒரு ஆய்வு அணிந்துரையாக விளங்குகிறது. அறிஞர் பெருமக்கள் மூவருக்கும் உளமார்ந்த என் நன்றி உரித்தாகும்.

காவியப் பெருமை குருவருளாகும். குறைகள் இருப்பின், எளியேனைப் பொறுத்து அருள வேண்டுகிறேன். சங்கர பக்தர்கள் இதனை வரவேற்று ஆதரிக்க வேண்டுகிறேன்.

பூவுலகின் குருநாதர் ஸ்ரீ ஸ்ரீபாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் பொற்பாத கமலங்களில் நமஸ்கரித்து மிகப் பணிவுடன் இக்காவியத்தை சமர்ப்பிக்கிறேன்.

குருபக்தியுடன்,
கே. ராமமூர்த்தி
(பாரதி காவலர்)

7-6-93
அபிராமபுரம்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தக்ஷிணாம்னாய

சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி

ஸ்ரீ ஜகத்குரு

ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்

பொற்பாதங்களில்

இக்காவியத்தை சமர்ப்பிக்கிறேன்.

-கே. ராமமூர்த்தி

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சிருங்கேரி நாயகருக்குச் சிருங்கார ஆரத்தி

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மகாகவி பாரதியின்
எண்ணம் நிறைவேறுகிறது

''எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்துகொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு, இவற்றினை யுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகிறான். ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்கள் எல்லோர்க்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன், காவியத்துக்குள்ள நலங்கள் குறைபடாம லும் நடத்துதல் வேண்டும்...''

—பாஞ்சாலி சபதம்
முகவுரையிலிருந்து

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

1. அனந்த, சத்யானந்தம்

(கடவுள் வாழ்த்து)

அனந்த சக்திக் குமரன்,
ஆரண முகத்தன் — அந்த
ஆதிமூலத்தை வணங்கிடுவோம்;
நித்தியப் பொருளாம்
ரத்தின கர்ப்பக் கணபதியாம்
வித்தைக்கு இறை விநாயகா,
வேண்டும் வரங்கள் அருள்வாய்!
வணங்கிடுவோம்; போற்றிடுவோம்.

□

எல்லாம் வல்லதாயும்
எல்லாம் நிறைந்ததாயும்
எல்லாம் அறிந்ததாயும்
அண்டமாகவும்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அண்டத்தின் பிண்டமாகவும்
மின்காந்த நுண்அலைகளாகவும்
மேவிடும், இயல்உலகை
வணங்கிடுவோம்; போற்றிடுவோம்.

□

அண்டங்கள் எத்தனை எத்தனையோ;
அத்தனையும் அழகுறச் சமைத்தனை!
அறிவுடன் அற்புதமாய் அமைத்தனை!
ஆயிரமாயிரம் கோடிகளாய்ப் படைத்தனை!
விண்டுரைக்க முடியாத சக்தியை,
வணங்கிடுவோம்; போற்றிடுவோம்.

மண்ணும் நீரும் நெருப்பும்
விண்ணும், வாழ்வின் உயிர்நிலைக் காற்றும்,
மூலக்கூறுகள் ஐந்தின்
ஆட்சியே இப்பிரபஞ்சச் சுழற்சி;
அவனியைக் காத்திடும் இயக்கம்,
அந்த ஆதிசக்தியை,
வணங்கிடுவோம்; போற்றிடுவோம்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அறிந்தும் அறியாமலும்,
உணர்ந்தும் உணராமலும்,
உருவோ, அருவோ, அருவுருவோ
அனந்த, சத்திய, ஆனந்தமாகிய
ஒன்றெனும் சீலத்தை,
பரம்பொருளின் கோலத்தை
வணங்கிடுவோம்;
என்றும் போற்றிடுவோம்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

2. நதிகளின் சங்கமம்

(பாயிரம்)

காலடி மண்ணின் காவியம்;
கயிலாய மலைமுடி ஒளிர் ஓவியம்;
ஞாலம் முழுவதும் தழைத்திடு வண்ணம்
ஞானம் அருளிடும் சங்கரர் வடிவம்.

பூர்ணாநதிப் பொலிவின் உதயம்;
நாகுலேரு நதிக்கரைச் செல்வம்;
ஸுப்ரா நதியில், குருவடிச் சரணம்;
துங்கை நீரில் துறவுச் சந்நியாசம்.

கங்கா நதியின் பிரவாஹ வெள்ளம்;
யமுனை நதியின் எழுச்சிச் சின்னம்;
துங்கா நதியின் தெளிவின் உருவம்;
ஸரஸ்வதி நீரின் ஆழமிகு படிமம்,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-0. In Public Domain. Digitized by eGangotri

நர்மதைப் பெருக்கை அடக்கும் கமண்டலம்;
கோதாவரி, கோமதி, பவானி, நொய்யல்
பொற்புடை நதிகளைப் போலே புனிதர்;
பொருனை ஆற்றின் தாமிரக் கலசம்.

பெண்ணை, பாலாறு, வைகை நதியொடு
பல்குனி ஆற்று பக்திப் பரவசம்;
மண்ணைச் செழித்திடப் பண்ணும்,
மாநதி எல்லாம் மனத்தில் பதியும்;

கண்ணன் பெயருள நதியுடன்,
காவிரி ஆற்றின் காவிய ஏற்றம்
எண்ணறு நதிகளாய்ப் பாய்ந்து.
எங்கள் நெஞ்சினில் சங்கமம்.

நதிக்கரை ஜனனம்
நதிக்கரை சரணம்
நதிக்கரை சந்நியாசம்
நதிக்கரை பட்டாபிஷேகம்
நதிக்கரை அருட்பயணம்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

நதிகளின் புனிதம் நல்கிடு வள்ளல்;
நற்றவ வேந்தர், பக்திப் பனுவல்;
நதிக்கரை, பெரும் பதிகளின்
புண்ணிய க்ஷேத்திரம் ஆகும்;
பாரதீ தீர்த்தர், புண்ணிய தீர்த்தர்,
பகவத்பாத கேந்திரம் ஆவர்.

பாப்பல நவமாய்ப் பாடி,
யாப்பில் அடங்கா எம் குருவை,
காப்பியமாக்கிப் பணிகின்றேன்;
கங்குலைப் பிளந்தே எழுகின்ற
கதிராம் எம் குருவடிக்கே
பாயிரம் பாடிப் பணிகின்றேன்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

3. சிறியவனின் ஆசை

(அவையடக்கம்)

வாணி, கலைத்தெய்வம்
வாக்தேவி சாரதாபீடம்
வித்யா சொரூபிணி உறைகின்ற
சிருங்கேரிச் சீர்மிகப் பெரிதாகும்;
சிறியவன் நான் அறிந்ததெல்லாம்
சிறிதளவே; சிறிதளவே தான்.

□

வையமெல்லாம் இசைந்தேத்த,
அருளாட்சி புரிகின்ற சிருங்கேரி நாயகர்
அனந்த ஸ்ரீ பாரதீ தீர்த்தர்,
திருவருள் பொலிகின்ற பெருங்கருணை
மாதவத்தின் மாட்சிகளும் திருக்
காட்சிகளும்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

குருமுக தரிசனத்தின் பன்முகமும்
நின்றொளிரும் சீர்த்திகளும்-மெய்க்
கீர்த்திகளும்

மாணுயர்ந்து நிற்கும்,
மலைபோன்ற மகத்துவமாகும்.
சின்னஞ் சிறியவன் நான்,
சிந்தூர ஆரத்தி எடுக்கின்றேன்.

சின்னஞ் சிறியவன் ஆசை-இது
சின்னஞ் சிறியவன் ஆசை
பண்டிதர்களிடம் படித்தேனில்லை;
புலமையும் பெற்றேனில்லை;
பாடமாய் நான் படித்ததெல்லாம்,
ஏடுகளில் நான் அறிந்ததெல்லாம்,
எளியேனுக்குத் தெரிந்ததெல்லாம்,
பக்தி ஒன்றே தான்—குரு
பக்தி ஒன்றே தான்.
சின்னஞ் சிறிய மழலை நான்
சிந்தூர ஆரத்தி எடுக்க வந்தேன்;
பொன்னொளிக் குருநாதர்
பொற்பாதம் பணிகின்றேன்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

4. பூமித்தாய்

தேவி சாரதையாம்
அம்பிகையின் தரிசனத்தில்
ஆசார்யாள் திருவடிவைக்
காண்கின்றேன் ; காண்கின்றேன்.

சிருங்கேரியைப் பாட வந்தேன் ;
பெருங்கீர்த்திப் பீடத்தைப்
பாட வந்தேன்;
திருவோங்கும் சாரதா பீடத்தைப்
பாட வந்தேன்;
திருவோங்கும் சக்தி பீடத்தைப்
பாட வந்தேன்;
வாக்தேவி வளர் பீடத்தை,
வித்யா சொரூபிணி வீற்றிருக்கும்,
வேதக் கருவோங்கும் பீடத்தைப்
பாட வந்தேன்;

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

விபாண்டகப் பெருமுனியாம்
தவமுனியின் திருமகனார்,
மழை பொழிய வகை செய்த
மாமனிதர், மாமுனிவர்
ருஷ்ய சிருங்கர் தவம் புரிந்த-
தவத்தின் காலடி பதிந்த
சிருங்ககிரி மண்ணைப் பாட வந்தேன்;
சிருங்கேரி மண்ணைப் பாட வந்தேன்;

மண்ணின்றி யாருமில்லை
ஊருமில்லை
பேருமில்லை
தேரும் இல்லை
தெய்வமும் இல்லை;

மண்தானே பூமித்தாய்-
இந்த
மண்தானே பூமித்தாய்!

□

''பூமித்தாயே
சிரம் தாழ்த்தி, கரம் கூப்பி,
மண்ணில் மெய்ப்பட
வணங்குகின்றேன்; வணங்குகின்றேன்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இப் பூ நிலந்தன்னில்
நீதான், முழு முதன்மையான தலைவி;
இந்த உலக இயற்கையின்
மூலக் கூறுகள் ஐந்தினையும்
இயக்குபவள் நீ; இயங்குபவளும் நீ தான்;

உண்மை மாறாத நிலையும்,
வண்மை உறுதிப் பாட்டமைவும்,
உன்றனருளால் உருவாகின்றன;

பார் முழுவதும் தழைக்கும்
பண்பாட்டு வடிவமும் நீதானம்மா!
சாந்தியும் நீதான்... சார்ந்திடும்
செல்வமும் நீ தான்...
பேணிக் காப்பவளும் நீதான்
பேறாய் எங்களுக்கு—
வாய்த்தவளும் நீதான், நீதானம்மா''

என, யஜுர்வேதம் சாற்றுகிற
பூமித்தாயின் குழந்தைகளை
பொழுதெல்லாம் ரக்ஷிக்கும்
பூவுலகக் குருநாதர், புண்ணியர்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஆதிசங்கர பகவத் பாதர்,
அன்னவர் வழி வழி, வழி வழி,
வந்தருள் புரிந்திடும் ஜகத்குரு
ஸ்ரீ சங்கராசார்யார்,
சிருங்ககிரி ஸ்ரீ சாரதா பீட
முப்பத்தாறாம் குரு நாதர்
ஸ்ரீஸ்ரீ பாரதி தீர்த்த பகவான்
பொற்பாதம் பணிகின்றேன்,
பொற்பாதம் பணிகின்றேன்;

காலடிச் சீர் வழங்கும் வள்ளலுக்கு,
கவிக்கோலம் போடுகின்றேன்;
எங்கள் சிருங்கேரி நாயகருக்கு
எடுக்கின்றேன் சிந்தூர ஆரத்தி.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

5. தொன்மையின் சின்னம்

அண்டகோடி இயக்கும் ஈசன் நேரில்
ஆதிசங்கரர்க்களித்த,
நிர்மல ஸ்படிக லிங்கமொடு
சிந்தூர வண்ண மாணிக்கம் பதித்த
ரத்தின கர்ப்பக் கணபதியும்,
அனாதிகால தெய்வச் சின்னங்களாக
இந்நாளும் சிருங்கேரி குருநாதர்
பூஜைதனில், பொலிகின்ற திருவருளாம்!
இரு புண்ணிய மூர்த்தங்களும்
தொன்மைக்கும் தொன்மையாகும்!
தொழுதேத்தும் சாரதா பீட,
தேசுமிகு சின்னமாகும்.

□

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தென்திசையின் தேவிபீடம்
துங்கா நதியின் புனிதமாகும்;
தொன்மையான பீடமாகும்;
மேற்குமலைத் தொடரின் மீது,
பண்டுதொட்டு நின்றிலங்கும்,
'கங்கை மூலம்' எனும் நாமமுடை
உற்பத்தி ஸ்தானமதில்,
துங்காநதி ஸ்படிகமாய்த் தவழ்ந்து,
ஓங்காரச் சுருதியோடு
மோனமிகு இடத்தில் பாய்ந்து,
துங்கை நீரிலோடும் தெளிவு
பண்டைக் காலம் பிறந்ததாகும்,
கங்கைமூலம் என்பதாலே,

அந்த—
பண்டை நாளில் ஏதென்ஸும் இல்லை;
பெர்சியமும், சைப்ரஸும் இல்லை;
எண்டிசையும் புகழுடைய துங்கை-கங்கை
வேதவாழ்வு, அனாதி காலம்
நதிக்கரையின் நாகரீகமாகும்;
ரோம் எழுந்து வீறுகொண்ட காலை,
ஜெருசலத்து, பாபிலோனிய

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-0. In Public Domain. Digitized by eGangotri

மாந்தர் வாழ்வுக் காலந்தன்னில்
வீறுடைத்த கங்கைக் கரை—
துங்கைக் கரை
நாகரீகமெல்லாம் தொன்மையாகும்;
நாடு, நகர், வளர்ச்சிச் சின்னமாகும்.
தர்மவழி செல்லுகின்ற
வேந்தர் காலமாகும்;
அன்புவழி வாழுகின்ற
மாந்தர் காலமாகும்;
புத்தர்காலம், அசோகரின்
எண்ணமாகும்;
புனிதகங்கைக் கரைவளர்த்த
வண்ணமாகும்;
குப்தர்காலம், மகதர்காலம்
மலர்ந்த தங்கே!
கோடிகோடி நெறிகளாட்சி,
வளர்ந்த தங்கே!

நதிமுகத்தில் யுக தரிசனத்தின்
காட்சிகளைக் கண்டிடலாம்
சீதை ராமன்
கீதை கண்ணன்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வண்ணருபம் அந்தநீரில்
— காணலாம்:
வாரணாசி—காசி நகரில்
காணலாம்;
கங்கை ஆற்றுக் கரையில்
காணலாம்;

கங்கை நதியின், புனிதநீரில்
ஆடலாம்;
சந்ததமும் கங்கைபுகழ்,
பாடலாம்:
கொடிகள் அங்கு, கற்பகத்தின்
கொடிகளாகும்:
படிகள்அங்கு, தெய்வச்சாரப்
படிகளாகும்:
மடியும்போது ராமநாமம்
செவியிலூறும்:
மணலும்அங்கு பிரசாதமாகிக்
குவியலாகும்.

டுண்டி விநாயகர் மூத்த
சோதரராம்;

Sri Vidyabharathi Book Centre, Sringeri

 CC-0. In Public Domain. Digitized by eGangotri

தண்டபாணி பைரவரும்
ஆதரவாம்;
அண்டசரா சரம்யாவும்
கங்கைமேலாம்
அங்காற்றும் நற்பணிகள்
பிள்ளைகளாம்!
ஜோதிர்லிங்க காசிவிசுவ
நாதர்தந்தை:
விசாலாட்சி தாயின்பாதம்
நாடும் சிந்தை;
வேதஞான கங்கைஅன்னை
சித்தியாவாள்:
மனைவியாகி மாட்சிகூட்டும்
புத்தியாவும்.
நூறுகோடி நதிகளிலாடும்
புண்ணியமும்
நோன்பாகும் வேதாகம
திண்மைகளும்
நூறுநூறு அசுவமேத
யாக பலனும்
நித்தியானந்த அன்னபூரணி
சீலங்களும்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஞானரூபா மணிகர்ணிகா
தந்திடுவாள்:
ஞானஒளித் தீர்த்தமென
வந்திடுவாள்!
ஞானசாந்தி தீரமங்கே
நீராடலாம்:
ஞானதாரை ஆதிகங்கை
சீராடலாம்!
சங்கரரும் கங்கைபுகழ்
தோத்தரித்தார்;
தங்கக்கவி பாரதியும்
பாத்தொடுத்தார்'

□

''கங்கா ஸ்நானம்
துங்கா பானம்''

□

துங்கா நதியின் பயணம்
வடகிழக்காய் ஓடிப்பாய்ந்து,
மங்காப் புகழைத் தங்கிடச்செய்தே
துங்காதேவீ உத்திரவாஹினியாய்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சிருங்கேரி வழியில் நடக்கும்
ரிஷ்ய சிருங்கர் கதையைக்
கூறும்;
மந்திரகீதம் செவியில்
ஊறும்;
மரகதச் சூழல் மனத்தை ஈர்க்கும்
சலசல என்னும் சப்தம்
தேவி சாரதையைப் பாடும்;
தவமாம் நதி நடமாய் ஆடும்;
குருவின் தெளிவை நீரில்
காட்டும்;
குவலய அன்பை அகத்தில்
ஊட்டும்;
சங்கரர் வடிவை நெஞ்சில்
நாட்டும்;
புனிதப் புனலாய்ப் பாயும்
மலையில், குகையைக் குடைந்தே
பாயும்
மேற்கே திரும்பி, கிழக்கிலோடிப்
பாயும்
பச்சிம வாஹினி பிரவாஹமாய்ப்
பாயும்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தீர்த்தஹல்லியைத் தாண்டியே
பாயும்
காடுகளின் ஊடே வேகமாய்
ஓடும்
மூங்கில் புதர்களைத் தழுவிச்
சாடும்
மலையிலும் நிலத்திலும் பாங்குடன்
ஓடி
மலர்களை அணைத்து மணமுடன்
ஓடி
கூடலிதன்னில் பத்ராவுடனே
கூடி,
குலவி ஒன்றாய் தானே சேரும்.

நதியின் பெருமை பதியில்
முழங்கும்
நகரின் அருமை நதியே
வழங்கும்
துங்கா நதியின் மங்காப்
புனிதம்
விஜய நகர ஆட்சியின்
படலம்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சக்திமிகு ஸ்ரீசக்கர அருளின்
வடிவம்
நவமாம் வாசல் திருநகரம்
நாட்டின் பெரும் தலைநகரம்

திருவின் பொலிவில்
குருவின் அருளில்

விளங்கிய நகரின் பெருமை
வித்யா ரண்யரின் மகிமை;
வித்யா ரண்யரின் ராஜஞானம்
சிருங்கேரி பீடச் சரித்திரமாகும்;
சிம்மாசனம், பட்டாபிஷேகம்,
மணிமகுடச் சீர் அத்தனையும்
சிருங்கேரி பீடப் பவித்திரமாகும்!

□

நிறைநிலைத் தவமே பூரணமாம்.
பூரணத்தில் ஜோதிமயப் பொறி தோன்றி
லிங்கமொடு ஒன்றாகி
சிங்கேஸ்வரத் திருஉருவாய்
கிக்காவில் ஆலயம் கொண்ட

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

திரேதாயுகப் பெருமுனியின்
தவநிலமாம் சிருங்கேரி

சத்திய பீடம்—இது
நித்திய பீடம்

வேதத் தருவளரும் பீடம்
ஞானக் கருவோங்கும் பீடம்
தக்ஷிணாம்னாய ஸ்ரீ சாரதா பீடம்
பாரதத்தின் தொன்மையான
பீடமன்றோ!
பாரதத்தின் தொன்மையான
பீடம் மட்டுமா?

கர்ப்பமுற்ற,
தவளைக்காக.
சர்ப்பமொன்று,
பகைமறந்து,
படமெடுத்து,
வகையறிந்து,
பரிவுகொண்டு,
குடைபிடித்த,

தாயின் கருணைப் பீடமன்றோ!
தாய்மையான பீடமன்றோ!

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஜகத்குரு சங்கரரின் பீடமன்றோ!
முப்பத்தாறாம் பீடாதிபதி எங்கள்,
ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த பகவான்
பொற்பாதம் பணிகின்றேன்;
பொற்பாதம் பணிகின்றேன்.

காலடிச் சீர்வழங்கும் வள்ளலுக்கு.
கவிக்கோலம் போடுகின்றேன்;
எங்கள் சிருங்கேரி நாயகருக்கு
எடுக்கின்றேன் சிந்தூர ஆரத்தி.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri



6. சிந்தூர விடியலில் சூரிய ஜனனம்

காலச் சக்கரம் சுழல்கிறது
மானுடம் அங்கே உழல்கிறது;
மதங்கள் கூறும் நல்வாக்கும்
மன்னர் ஆட்சிச் செல்வாக்கும்
மண்ணில் காணும் சீலங்கள்,
காலவெள்ளக் கோலமுடன்
மாந்தர் வாழ்வும் மாறுகிறது.
மாற்றங்கள் நாளும் நிகழ்கிறது
தோற்றம் புதிதாய் பிறக்கிறது
காலச் சுழற்சி புரிகிறது
காலச் சக்கரம் சுழல்கிறது.

□

பொழுதுகள் தோன்றும்
பொழுதுகள் மறையும்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வைகறை, காலை, நண்பகல்
எற்பாடு, மாலை, யாமமெனச்
சிறுபொழுது ஆறும்
இளவேனில், முதுவேனில்
காரும் குளிரும்
முன்பனி, பின்பனி எனப்
பருவங்கள் ஆறும்
பன்னிரு மாதக் கூறுகள் ஆகும்.
வசந்தகாலத் தெளிந்த நீரும்
மங்களம் நிகழ்ந்திடும் சீரும்
அசுவமேத யாக, அன்னதானப் பேறும்
ருது வர்ணனம், வேதம் கூறும்;

வசந்த காலம்
வண்ணக் கோலம்
அதனைத் தொடரும்
பருவம் மலரும்
பண்புகள் படரும்

அருளும் பொருளும் சேர்ந்திட
ஆயிரம் சிந்தனை சார்ந்திட
கால இயல்புகள் மாறும், மாறும்;
ருது பரிவர்த்தனமாகும்; ஆகும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஆண்டுகள் மேல் ஆண்டுகள்
உருளும்;
அவனியில் நிகழ்வுகள் தொடரும்;
திரளும்;
அதோ—
காலடிச் சுவடுகள் தெரிகிறது
கிழக்கைக்கீறி வருகிறது
விடியல் வெளிச்சம் வருகிறது;
காலச் சுழற்சி புரிகிறது
காலைக் கதிரும் தெரிகிறது.

□

ஸத்ய ஸ்வரூபமாம்
ஆதித்ய மண்டலத்தின்
பிரம்ம முகத்துவாரத்திலிருந்து
தங்கமயமாய்ப் பிரகாசிக்கும்
ஜோதிமயமான, தங்கத்தகட்டையகற்றி,
சூரிய தேவா வா, வா!

ஸத்யமே என்றும் தர்மமாகும்
ஸத்ய உபாஸனத்தில்
தர்மமே ஸத்யமாகிறது இங்கே.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-0. In Public Domain. Digitized by eGangotri

பிராணனின் ஜீவித காரணமான
ஞானக்கதிர் வீச்சுத் தோரணமான
பரப்பிரும்ம தேஜஸ் நீ!
அந்த திவ்ய தேஜஸின் ஜனனம் தான்
பிரம்மாண்டலோக வானொளியும்
இதய கமலத்தின் உள்ளொளியுமாகும்;
எல்லாம் ஒன்றாகிச் சுடர்விடும்
'பரபிரும்ம ஸ்வரூப'தேஜஸ்
'நான்' என்றே நினைந்துருகச் செய்யும்
அருணோதயத்து தேவதேவா, வா!

□

அருணோதயம் அருள்வீசும் அதிகாலை
ஆத்மானந்தம் அருட்பிரகாச வெள்ளம்
திருவோங்கும் செங்கதிரின் சௌந்தர்யம்
சீர்மிகுந்து சுடரொளிரும் பொழுதாகும்.
அடிவானில் ஒளிதந்து பகலாகுமுன்னம்
அற்புதமாம் சாரதாதேவியருள் சிந்தூரம்;
விடியலில் உதிக்கின்ற செவ்வதனம்
விரிகதிரின் இளமஞ்சள் பொன்வண்ணம்;
உதயராகம் சங்கீர்த்தனம் தெய்வகீதம்
உமாசுதம் வந்தனம், வந்தனம்.
நிதம்நிதம் பகவத்பாத பாதசேவனம்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

நித்தியானந்தம் பரமானந்தம், பரமானந்தம்
துங்கைநதி தீர்த்தம், பரமசுகம்
ஸ்ரீசாரதா தெய்வம் ஜகத்ரட்சகம்.
தங்கமணிக் குருநாதர், தவவேந்தர்
சந்ததமும் சர்வலோக க்ஷேமக்காரணர்,
சதுராம்னாய பீடச் சீருடைப் பூரணர்
சங்கரராம் கோடிக் கதிரொளியின்
செம்பொற்பிழம்பு, சூரிய ஜனனம்

திருவருள் பொலிந்திடும்
குருவருள் நினைந்து

ஸ்ரீஸ்ரீ பாரதி தீர்த்த பகவான்
பொற்பாதம் பணிகின்றேன்
பொற்பாதம் பணிகின்றேன்.

காலடிச் சீர்வழங்கும் வள்ளலுக்கு,
கவிக்கோலம் போடுகின்றேன்;
எங்கள் சிருங்கேரி நாயகருக்கு
எடுக்கின்றேன் சிந்தூர ஆரத்தி.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சிருங்கேரி நாயகருக்கு * சிந்தூர ஆரத்தி *

7. பண்டிதராஜ குருநாதர்

ஞாலத்தில் மலையழகும் நதியழகும்
நிலைகொண்ட நித்தியமாக் காட்சிகளாய்
சீலத்தை நெஞ்சத்தில் நிறைக்கின்ற
சிருங்கேரி எழில்யாவும் சிலிர்ப்பாகும்.

காலைக் கதிரழகில் தெரிகின்ற அம்பிகையின்
கவினழகுச் சிந்தூர வண்ணவடிவத்தை,
மாலை வனப்புகளில் புரிகின்ற விண்ணழகில்
வாக்தேவி சாரதையாய்க் கண்டிடலாம்.

காற்றலைகள் மேலெழுந்து மேலெழுந்து,
கான்முகட்டில் உராய்ந்து உராய்ந்து,
நாற்றிசையும் வட்டமிட்டு வட்டமிட்டு,
நல்லிசையாய் தேவகானம் கேட்டிடலாம்.

செங்கதிர் வண்ணம் வானில் மறைந்து
தேனிலவெங்கும் தோன்றிடும் போது

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சந்திரனொளியில் சாரதையைக் கண்டிடலாம்.
சரணமென்று திருவடிகள் பற்றிடலாம்.

நிலவுவந்து வானமெங்கும் தண்மையாகும்
நித்தியசத்தியம் சந்திர கலையுமாகும்;
குலவிடும் விண்மீன், காற்றொடு குழம்பாகும்
கோல அருள் அங்குதெய்வக் குதூகலமாகும்.

அடிவானம் பரிதிக்கோளம் அம்பிகையாம்
அம்புலியந்த வான்மதிச் சந்திரனும்
இடிமின்னல் பெருமழையும் சாரதைவடிவாகும்;
ஈடில்லா இயற்கைஎலாம் இறைமையாகும்.

சாரதா ஆலயப் பிராகாரப் பிரதட்சணம்
சாந்தநிலை உணர்வுகளை சப்திக்கும்
நாரதகானம் இதயத்தில் மிதந்துவரும்
நாயகராய் குருவடிவம் தெளிவாகும்..

□

ஸ்ரீ பாரதீ தீர்த்த பகவான்—
அலகுமல்லபாடு அக்ரஹார
நாகுலேரு நதிக்கரைச் செல்வர்,
மூன்றாண்டு நிறையுமுன்னர்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சம்போ சிவசிவ எனும் உச்சாடன
சைவக் கலை மொழிந்த
சத்உணர் சிவனருட் சீலர்
சீதாராம ஆஞ்சனேயலு பாலர்
அகவை ஐந்தாகும் தருணம்,
அற்புதமாய் ஸம்ஸ்கிருத பாடம்,
வயதேழு ஆனதுமே உபநயனம்
வளர்கலைகள் கற்பதிலே ஆர்வம்;
வல்லமைசேர் நுண்ணிய பார்வை
எல்லாமிணைந்து முனைப்பாகும்;
எப்போதும் ஈசன் நினைப்பாகும்.

ஈரைந்து பிராயந் தன்னில்
குருநாதர் ஸ்ரீஅபிநவ வித்யாதீர்த்தர்
பொலிவுடைப் பொன்னாடை அருள்பெற்று
வேதமொழி வர்ஷித்த
வித்தகப் பேராளர்
ஞானக்கலை யாவும்
பொலிகின்ற சீராளர்
புனிதநீர்த் துறையில்
உதயமான அருளாளர்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஆம் ; அன்றந்த—
ஸுப்ரா நதிக்கரையில் சரண்புகுந்து,
எட்டாண்டு, ஏடெல்லாம் எழுத்தெல்லாம்
அபிநவ வித்யா தீர்த்தர் அருகிருந்தே
சாத்திரங்கள்
சூத்திரங்கள்
பாஷ்யங்கள்
தோத்திரங்கள்
உபநிடத காவியங்கள்
அகிலத்தின் கலைஎல்லாம்
கற்றபிரான்;
ஆதிசங்கரரின் ஏற்றம் கூற
வந்தபிரான்.

துறவுக்கு முந்நாளில் இச்சீராளர்
அக்னி முன்னம் ராமநாமம் ஜபித்தபோது
சந்திரசேகர பாரதீ சமாதி முன்னம்
சொரூபக் காட்சி தந்த அருட்சித்தர்;
பௌதிக ரசாயனங்களின்
ரசவாத எல்லைகளைத் தாண்டிய
மெய்ப்பாட்டுச் சீர்மிகு சதுரர்;
கதித்த நித்யசித்திச் சாதகர்;

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

காலடியின் ஞானச்சீரடி பதிக்கும்
பண்டித ராஜ குருநாதர்
ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த பகவான்
பொற்பாதம் பணிகின்றேன்
பொற்பாதம் பணிகின்றேன்.

காலடிச் சீர்வழங்கும் வள்ளலுக்கு,
கவிக்கோலம் போடுகின்றேன்;
எங்கள் சிருங்கேரி நாயகருக்கு
எடுக்கின்றேன் சிந்தூர ஆரத்தி,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸ்ருங்கேரி நாயகருக்கு * ஸ்ருங்கார ஆரத்தி *

8. ஸ்ரீ பாரதீ தீர்த்த பகவான் பட்டாபிஷேகம்

உலகு உய்ய வந்தளங்கள் தவராசர்
அத்வைத சித்தாந்த வியாபகத்தில்
எட்டோடு மூவைந்தாண்டு பொற்கால
ஏற்றங்கள், எழுச்சிகள், எல்லாமும்
நேர்த்தி மிகு குருவழிக் கீர்த்தியாகும்.
இரவிராஜன், ஸ்ரீ ராமன் பட்டாபிஷேக
காட்சிதனைத் தம்பெயரில் கொண்டிருந்தார்;
துங்கையிலே துறவியாகி பாரதீ தீர்த்தரானார்.
சிருங்கேரி அவிச்சின்னப் பரம்பரையின்
சிஷ்ய ஸ்வீகாரம் தேவி சாரதையின்
அருளாணைப்படி அமையும், அற்புதத்தை

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அபிநவரும் பிரகடனமாய் புரிந்திட்டார்
மகா சந்நிதான ஆகர்ஷண திவ்யத்தில்
மாதேவி சாரதையின் அருள் கூடிக்கூடி
சாரதாபீடப் பட்டாபிஷேகப் பொலிவு
சரித்திரத்தில் வரலாறாய் பதிந்ததன்று.

□

தேகமிகு சிருங்கேரி சாரதா பீடாதிபதி
அருட்கனலாய்
தண்புனலாய்
மிருகசீர்ஷ தாரகைத் திருநாளாம்
குருவார
நண்பகலின், நற்பொழுதின், நாயகராய்
குருபீட
சிம்மாசன, தெய்வாசனத் திலமர்ந்து
கொலுவிருந்தார்,
பொலிவுதந்தார்;
தங்கமகுடம் தனில் தனிவயிரம்
முத்துமணி
ரத்தினங்கள்
தேவி அருட் புன்னகையின் பேரொளியாய்
பளிச்சிட
பளிச்சிட

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

திரளாகிச் சார்ந்த சீடர்க்கெல்லாம்
அருள் சுரந்து
அருள் சுரந்து
முடிசூட்டுவிழா மாண்புடைச் சின்னங்கள்
சீர்துலங்க
பல்லக்கில் ஸ்ரீபாரதீ தீர்த்தர் பவனியன்று
ஊர்வலமோ
பார்வலமோ
என்றார்ந்து பக்தரெலாம் மெய்சிலிர்த்து
வியந்ததுவும்
நயந்ததுவும்
சரித்திரத்தில் வரலாறாய் பதிந்ததன்று.

□

வித்யாரண்ய குருராஜர் வகுத்தவண்ணம்,
வாக்தேவி பீடப் பட்டாபிஷேகத்தன்று
நாதஸ்வர நல்லொலி மங்களமாய்
இசைக்க
இசைக்க
வித்யா சங்கரர் வியன்கலைக்கோயில்,
சக்தி கணபதி தரிசனம் கண்டே

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

நித்யானந்த சொரூபிணி சாரதையின்
ஆலயம் வந்தார்
பாலனம் புரிந்திட
ஸ்ரீபாரதீ தீர்த்த பகவான் வந்தார்.
ஸ்வர்ணபுஷ்ப, நவரத்னாபிஷேகம்
புனிதநீர், புண்ணியந்தரு மந்திரமும்
முழங்க
முழங்க
தேவி சாரதையின் செங்கமலத் தாளினை
தொழுது
தொழுது
ஆலயத்து முகமண்டபத்தில்,
வெள்ளிப் பீடந்தன்னில் வந்தமர்ந்தார்.
பாதபூஜை புரிந்திடும் பக்தர் மனம்
சிலிர்த்திட
சிலிர்த்திட
நெஞ்சினில் குரு வலம் வந்தார்;
அருளரசர், அருள்நலம் தந்தார்.
பண்டிதராஜ குருநாதர்
ஸ்ரீ பாரதீ தீர்த்தர் பட்டாபிஷேகப்
பெருமைதனை
அருமைதனை

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பாவியலின் பல்வண்ணப் பான்மையொடு
தீட்டிடலாம்;
காவியமாய் சொல்வண்ணக் காட்சிகளாய்
காட்டிடலாம்
காட்டிடலாம்;
தேவி சாரதை சன்னிதியில் நிகழ்ந்த
பட்டாபிஷேகம்
சரித்திரத்தில் வரலாறாய் பதிந்ததன்று;
வரலாற்றில் பொன்னேடாய் பொலிந்ததன்று.

□

வானத்தின் பெரும் கருணை மழையெனப்
பொழிந்ததன்று
பொழிந்ததன்று;
வாக்தேவி அருள்தானே மழையானது.
காற்றலையின் சப்தத்தில்
வேதத்தின் சாரங்கள் மந்திரமாய்
மொழிந்ததன்று
மொழிந்ததன்று;
தேவி பீடம் தானே வேத மந்திரமானது.
மரம், செடி, கொடிகள் அசைந்து அசைந்து,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மங்கல முரசமாய், கீதமாய்
இசைத்ததன்று
இசைத்ததன்று;
மலர்களிலெல்லாம் தெய்வமணம்
மிகுந்ததன்று;
ஊர்வன, பறப்பன, நடப்பன யாவும்
ஒரு புது மலர்ச்சி கொண்டதன்று;
சிருங்ககிரி நிலம் வந்தவர்க்காய்
விரிந்ததன்று
விரிந்ததன்று;
சிஷ்யர் மனம் ஆனந்தச் சிலிர்ப்பாகி
களித்ததன்று
களித்ததன்று;
மலை முகட்டில் ஒளிக்கீற்று பளிச்செனவே
தெரிந்ததன்று
தெரிந்ததன்று;
மலைமுகட்டில் ஒளிக்கீற்று பளிச்செனவே
ஒளிர்ந்ததன்று
ஒளிர்ந்ததன்று;
மகான் சங்கரரின் திவ்ய ஜோதியெனப்
புரிந்ததன்று
புரிந்ததன்று.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

புரிந்தருளும் பண்டித ராஜர்,
வியாக்யான பீட மகா ராஜர்
வியாக்யான பீட மகாராஜ ராஜர்;
ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த பகவான்
தவச் சக்கரவர்த்தி, சிருங்கேரி ஜகத்குரு
சதுர்வேதச் சாத்திரப் பெரும் பொக்கிஷம்;
சொற்பதம் கடந்த துரிய நிலைத் தூயவர்.

குவலயம் காத்திடும் குருமகராஜர்,
சாந்த வடிவானவர், சற்குரு;
வியாகரண முடிகண்ட வித்தகர்.
சித்தக் கடலில் சிவம் காட்டும்
சங்கரரின் கலங்கரை விளக்கு;
காலடிக் கருணையின் வடிவுக் களஞ்சியம்.

தாரணி புகழ்ச் சாரதை தந்த
ஞானவாரிதி
பாரினை நடத்திடும் பல்கலைத்
தேரின் சாரதி
கீழ்வானின் செவ்வண்ணச் சிந்தூர
காலைக் கதிரழகின் பொன்னொளிக்
குருநாதர்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

 In Public Domain. Digitized by eGangotri

ஜோதிமய
ராஜகம்பீர
முத்துமணி
வைர ஒளி
பொன் மகுடப்
பீதாம்பரத் தனியரசர், தங்கக் குருநாதர்
பரிபூரண, கருணாரச, சகல நிகமாகம
திருவிழி
அருள் மொழி
நலம் தரும்
நிறைமொழி
தினம் தினம் தந்தருள் புரிந்திடும்
ஸ்ரீ பாரதீ தீர்த்த பகவான்—
சித்திரை மாத புது நிலவோ
சித்திர வித்தக முத்தமிழோ
தத்துவ சத்திய சம்ஸ்கிருதமோ
இத்தரை மீது,
முத்திரை பதித்த
நித்திலமோ
குருமணி ரத்தினமோ, என

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

என்றன்
எண்ணம்
என்றும்
எண்ணும்
வண்ணம்
சித்தம்தனில் நித்தம்
புத்தமுதாய்—பூரணமாய்
அருளினைப் பொழிந்திடும்
ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த பகவான்
பொற்பாதம் பணிகின்றேன்
பொற்பாதம் பணிகின்றேன்

காலடிச்சீர் வழங்கும் வள்ளலுக்கு,
கவிக்கோலம் போடுகின்றேன்;
எங்கள் சிருங்கேரி நாயகருக்கு
எடுக்கின்றேன் சிந்தூர ஆரத்தி.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சிருங்கேரி நாயகருக்கு * சிருங்கார ஆரத்தி *

9. தக்ஷிணத் திரிவேணி

பார்புகழ் பாரதீ தீர்த்த பகவான்
பன்மொழிப் புலமையின் பரிபூரணர்,
பாரதப் பண்பாட்டுப் பரிபாலகர்;
சாரதாபீட—ஸர்வக்ஞபீட சிம்மாசனாதிபதி.

சிருங்கேரி எழில்மேவும் நிலமாகும்
சீர்யாவும் அம்பாளின் அருளாகும்
தேவி சாரதையை
இன்றிங்கே—என் கண்முன்னே
காவி சாரதையாய்
காண்கின்றேன் ; காண்கின்றேன் ;
களிமிகக் கொள்கின்றேன்,

அம்பிகையின் திருஉருவில்
ஆசார்யாள் முழுவடிவை

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

காண்கின்றேன், காண்கின்றேன்;
அம்மன் தரிசனத்தில்
ஆசார்யாள் திருவடிவை
அகமகிழத் தரிசனம் செய்கின்றேன்;
அளப்பரிய ஆனந்தம் கொள்கின்றேன்;
ஆடுகிறேன், பாடுகிறேன்;
மண்ணில் மெய்ப்பட வணங்குகிறேன்;
மறைமொழித் தவமுனியாம், எங்கள்
ஸ்ரீ பாரதீ தீர்த்த பகவான்,
செந்தாமரைக் கரங்களில் மலரெடுத்து
வெள்ளி மந்தாஸ மண்டபத்து
தன்னொளிக் கதிர் அலையொடு
ஸ்ரீசாரதா—சந்திரமௌளீஸ்வரர்
திருமுன்னர் அர்ச்சிக்கும் அற்புதம்,
அம்மம்மா! அற்புதமன்றோ!
அகநயனங்களில் அம்பிகை தரிசனமும்
அபிஷேக அருள் பொழியும் அழகெல்லாம்
ஆத்மானந்த ப்ரவாஹமன்றோ!
ருத்ர, சமக சந்தமிகு சப்தமெலாம்
புருஷ, துர்காஸூக்தம், ஸ்ரீஸூக்தமொடு
மந்திரஒலி வியாபமாகும்
பூஜைப்பொழுது பக்திப் பரவசமன்றோ!

Sri Vidyabharathi Book Centre, Sringeri

 CC-0. In Public Domain. Digitized by eGangotri

சிருங்கேரி சாரதையின் வடிவாகும்
சிருங்கேரி ஆசார்யாள், எங்கள்—
ஸ்ரீ பாரதீ தீர்த்த பகவான் தரிசனத்தில்
தெரிவதென்ன? தெரிவதென்ன?
அந்தத் திரிவேணி
சங்கம ஸ்நானம் தெரிகிறது,
இதோ தெரிகிறது,
தெரிகிறது.
அங்கே —
கங்கை, யமுனை, ஸரஸ்வதி
இங்கே —
துங்கபத்திரை ஸ்படிக நீர்நதியும்
சிருங்கேரி ஆசார்யாள் அருள்நதியும்
வாக்தேவி சாரதையாம் கருணைநதியும்
கங்கை
யமுனை
ஸரஸ்வதியாய்
சங்கமிக்கும் தக்ஷிணத் திரிவேணி —
தெற்கேயும் ஒரு திரிவேணி.
ஆம் : இந்த
சங்கமத்தில் —
ஞானஸ்நானமன்றோ
ஞானஸ்நானமன்றோ
தெரிகிறது;
புரிகிறது.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஞானத் தென்றலிங்கு வீசும்
கானம் போல உண்மை பேசும்
மோனத் தலத்திலிங்கு தினமும்
சாந்தமதை நாடும்,
சிந்தைஒன்று கூடும்;
எந்தநாளும் தேவி,
சாரதையைப் பாடும்;
இசையிலேறி ஆடும்;
அருளும்வந்து சேரும்;
கவலையாவும் தீரும்;
இந்த, தேவிபீடம் வந்து பாடுகின்றேன்;
வேதஞான,
வித்தகங்கள்,
காலகாலம்,
வழிவழியாய்,
விருட்சமாகி,
விழுதுவிட்டு,
வளர்ந்து ஓங்கி,
சீர்மையோடு,
நெறிகளாகி,
அற்புதத்தின்
அற்புதமாய்,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

திகழுகின்ற தேவிபீடம் வந்து
பாடுகின்றேன்;
மகா சந்நிதானம் காலடியில் நின்று
பாடுகின்றேன்;

பக்தியோடு,
பணிவுகொண்டு,
விநயமோடு,

பண்டிதராஜ குருநாதர் காலடியில் நின்று
பாடுகின்றேன்!

ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த பகவான்
பொற்பாதம் பணிகின்றேன்;
பொற்பாதம் பணிகின்றேன்,

காலடிச்சீர் வழங்கும் வள்ளலுக்கு,
கவிக்கோலம் போடுகின்றேன்;
எங்கள் சிருங்கேரி நாயகருக்கு
எடுக்கின்றேன் சிந்தூர ஆரத்தி,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

10. குரு தரிசனம்

பிரம்ம வித்யா சொரூபிணி
பவனி வரும் நவராத்திரி நற்பொழுதில்,
அம்பிகையைப் பார்த்த வண்ணம்
சிருங்கேரி ஆசார்யாள்
காலடி மேல் காலடி வைத்து,
வையத்தை வாழவைக்கும் குருநாதர்
வைரமணி, பொன்மகுட வண்ணத்தோடு
வந்திடும் எழிலை
வழங்கிடும் அருளை,
சாரதா பீடாதிபதி சாதுர்மாஸ்ய
சீர்த்திமிகு நோன்பழகின் நேர்த்திகளை,
பாடி மன மகிழ்ந்திடலாம்.

நரஸிம்ம வனத்திருந்து
நதிகடந்து,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சிருங்கேரி ஆசார்யாள்
நடை நடந்து
வித்யாதீர்த்த ஸேது வழி
வரும் மாட்சி,
பெரும் காட்சி;
ஸ்ரீபாரதீ தீர்த்த பகவான்,
திருவருள் சுரந்திடும்
குருமுக தரிசனத்தை
பாவிரித்துப் பண்ணிசைத்ததனை,
பாடி அகமகிழ்ந்திடலாம்,

□

அமர வாழ்வுக்கு அமுத கலசமும்,
ஞானவொளி வீச்சுக்கு புத்தகமும்,
உலக உயிர்ப்புக்கு ஜெபமாலையும்,
ஜீவ-பிரம்ம ஒருமைச் சின்முத்திரையும்.
வரம் தரும் கரங்களாய்
பிரபஞ்சத்தின் கருப்பையாம்
தாரணியின் தனிமுதல் தலைவி;
சித்தாகித் திகழும் சாரதா,
ஆனந்தமாகிடும் லலிதா,
சித்தானந்த சொரூபிணி சாரதாம்பா!

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அகலென ஒளிதரும்,
திருவிழி சுடர்விடும்,
முகமலர்ந்து அருள்தரும்,
நிறையவள் இறையவள்,

இலக்குமி, சரஸ்வதி ஈஸ்வரியாம்;
மீனாக்ஷி, காமாக்ஷி, விசாலாக்ஷியாம்
சுந்தரத் திருவடிவினளாம்,
நான்முகனும் மாலவனும் ஈஸ்வரனும்
துதிக்கின்ற சீர் படைத்தவளாம்,

இன்னிசைப் பண்ணின்,
உன்னதம் நயக்கின்ற
சுயம்புவான கலைகளின் நித்தியவாசினி
குரு ரூபிணி சாரதை
நவராத்திரி நற்பொழுதில்
தந்திடும் தரிசனக் காட்சி,
நேமியெலாம் அன்னையின் ஆட்சி!
தொழுதிடும் நெஞ்சை நெகிழ்த்திடும்,
துங்கபத்திரைத் தூயவளொடு

தவவேந்தர் அங்கெழுந்து,
புவிவேந்தர் எனத் திகழ்ந்து.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

 CC-0. In Public Domain. Digitized by eGangotri

ஆதிப் பரம் பொருளாய்
மூலப் பழம் பொருளின்

பேரருள் பொலிந்திடும்
பெம்மான் தரிசனத்தை

சாரத நவராத்திரி காலத்தில்
நாத நர்த்தனத் தோத்திரமாய்
நாம் பாடி, மகிழ்ந்திடலாம்;
ஆதிக் கலைகளின் நாயகியை,
ஆசார்யாள் சன்னிதியில்,
அகமகிழ்ந்து பாடிடலாம்;
அகண்ட பரிபூரணன்,
அருளைப் பெற்று வாழ்ந்திடலாம்.

□

ஸ்ரீ பாரதீ தீர்த்த பகவான்
எங்கள் பண்டிதராஜ குருநாதர்
இவரே-நமக்கு அன்னை தந்தை;
முதலில், அன்னை எனப் பகர்ந்திடவா
-இல்லை
முதலில், தந்தை எனப் புகன்றிடவா?
நவமணியென ஒளிர்விடும்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

நற்றவக் குருமணியின் திருவருளால்
'எந்தாய்' என விளித்தே பணிகின்றேன்
பணிகின்றேன், பணிகின்றேன்.

இவரே நமக்கு—
தயாகுரு— தனிச்சுற்றம்
எல்லாமும் நமக்கு இவரல்லவா!
நமக்கு உறவு-நமக்கு உலகு
நமக்கு உணர்வு-நமக்கு உயர்வு
நமக்கு உபதேசம்-நமக்கு உத்தரவு
நமக்கு உணவு-நமக்கு உடுக்கை
நமக்கு உவகை-நமக்கு இருக்கை
நமக்கு இகம்-நமக்கு பரம்
நமக்கு வீடு-நமக்கு நாடு
எல்லாமும் இவரல்லவா
நமக்கு இவரல்லவா;
இவரல்லவா;
மேலும் சொல்லவா!

□

எங்கள் ஸ்ரீபாரதீ தீர்த்த பகவான்,
பூ முகத்தை, பொன்முகத்தை,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

புது முகத்தை பாரிஜாதப்
புனித முகத்தை,
புன்னகையைப்
பேரருள் பூ மழையாய்
பொழிந்திடும் மென்முகத்தை,
பாமரர், பண்டிதர்க்கெல்லாம்
பக்திவழி காட்டுகிற
பரிவு முகத்தை, புண்ணிய முகத்தை,
பளிங்கு முகத்தை,
விபாண்டக முனிமுகத்தை,
ரிஷ்யசிருங்கர் செங்கதிர் முகத்தை,
திவ்ய ஜோதி முகத்தை,
பண்வடித்த பாமுகத்தை,
சாரதா பீடக் கோமுகத்தை
காண்கின்றேன், காண்கின்றேன்;
களிமிகக் கொள்கின்றேன்.

அம்மட்டோ!
வால்மீகி, காளிதாசன், கம்பநாடன்
கவிமுகத்தை, குறள் முகத்தை,
பாரதி முகத்தை,
திருமந்திர முகத்தை,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

திருமூர்த்தி சொரூப முகத்தை,
காண்கின்றேன்.

சதாசிவ முகத்தை,
நாரணர், நான்முகர் நன்முகத்தை,
வசிஷ்டர், சக்தி, பராசரர்,
வியாசர், சுகரென்னும் பஞ்சமுகத்தை
கௌட—கோவிந்த கோதகன்ற
குருமுகத்தை, அந்த இருமுகத்தை,
பொன்மழை வர்ஷித்த
சங்கரர் ஸ்வர்ண முகத்தை,
பூரணப் பொலிவு முகத்தை,
பிரம்ம சூத்திர பாஷ்ய முகத்தை,
சங்கரபாஷ்ய ப்ரஸ்தான 'பஞ்சபாதிகா'
பத்மபாதர் கமலத் திருமுகத்தை,
குரூஉரைப் பேறுபெற்ற
ஹஸ்தாமலகர் நெல்லிக்கனி முகத்தை,
பவசங்கர தேசிகமே சரணமென
பாவிருத்தப் பெயர் கொண்ட
தோடகர் சீர்முகத்தை,
பாஷ்ய வார்த்திக எழிலுடைய
மானஸோல்லாஸ சுரேஸ்வரர்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

 CC-0. In Public Domain. Digitized by eGangotri

நைஷ்கர்ம்ய சித்தி வேதக் கருமுகத்தை,
சங்கரர் வழிவந்த இச்சதுர்முகத்தை,
காண்கின்றேன்.

தாரணிபுகழ் சிருங்கேரி மலைமுகத்தை,
எழில் தவழும் நிலமுகத்தை,
சக்திச் சாரதைத் தலமுகத்தை
காண்கின்றேன்.

சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்து
குருவரிசை ஆதிஸப்த முகத்தை,
லம்பிகா யோக நிஷ்டராம்
வித்யா சங்கர தீர்த்தர்
யோகக் கலை முகத்தை,
சதுர்மூர்த்தி வித்யேச்வரர் முகத்தை,
பாரதீ கிருஷ்ண தீர்த்தராம்
ஏகசிலா சகோதரர் இளைய முகத்தை
சாம்ராஜ்ய வள்ளல் வித்யாரண்யர்
வீர, கம்பீர, ராஜத் திருமுகத்தை,
சந்திரசேகர, நரஸிம்ம, புருஷோத்தம,
சங்கரானந்த, ராமச்சந்திர, சச்சிதானந்த,
அபிநவ், பாரதீ என நாமமுடை
இருபத்து ஆசார்யாள் ஒளிமுகத்தை,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

காலடித் தடம்கண்ட வான்சுடர்
ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ம
பாரதீ காலடிக் கண்முகத்தை,
சிவயோகச் சந்திரசேகர பாரதீ
மோனச் சிவமுகத்தை,
பாலப் பருவந்தொட்டே
'அந்தர்முக'மான குருமுகம் கண்ட
அபிநவ வித்யா தீர்த்தர் அருள்முகத்தை,
காண்கின்றேன், காண்கின்றேன்.
அம்மட்டோ!
அன்றாடம் சீடர்தம் குறைதீர்க்கும்
குணமுகத்தை, தவக்கோன் முகத்தை,
கோடானு கோடி மக்கள்
கண்டு அகமகிழும் குருதரிசனத்தின்
ஜனமுகத்தை,
நானே பிரம்மமென்னும் மகாவாக்ய
நல்லொலி முகத்தை, ஞானக்கடல் முகத்தை,
நயமொடு பக்திப்பயன் தருமுகத்தை,
தசனாமி சந்யாசி முகத்தை,
ஸர்வதேவதா மயன்முகத்தை,
அத்வைத அணி முகத்தை,
மறைமணித் தவமுகத்தை,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

நிறைமொழி நேர்முகத்தை,
களிமுகத்தை, கனிமுகத்தை,
கருணா சாகர முகத்தை,
வளிமுகத்தை, வான்முகத்தை,
வாக்தேவி முகத்தை,
உபநிடத நூல்முகத்தை,
சுடர்முகத்தை, ஸ்ம்ருதி முகத்தை,
செந்தாமரை முகத்தை,
செந்திரு முகத்தை,
சத்தியச் சீர்முகத்தை,
சந்திரகலை முகத்தை,
ஞானபானு முகத்தை,
சாந்தக் கோல முகத்தை,
சக்திச் சீல முகத்தை,
தியான, பூஜா, மந்திர
மோக்ஷ மூலமுகத்தை,
காண்கின்றேன், காண்கின்றேன்.
ஸ்ரீ பாரதீ தீர்த்த பகவான்
தரிசனத்தில் காண்கின்றேன்;
ஆனந்தக்களி கொள்கின்றேன்.
பண்டிதராஜ குருநாதர்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த பகவான்
பொற்பாதம் பணிகின்றேன்;
பொற்பாதம் பணிகின்றேன்.

காலடிச்சீர் வழங்கும் வள்ளலுக்கு,
கவிக்கோலம் போடுகின்றேன்;
எங்கள் சிருங்கேரி நாயகருக்கு
எடுக்கின்றேன் சிந்தூர ஆரத்தி.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

11. குரு அருள் பொலிக

(மங்களம்)

இன்று வந்து, இங்கு வந்து,
எங்கள் குரு தரிசனத்தை
பெற்றுவிட்ட யாவரும்;
யாவரும்;
இன்னும் நூறு ஆண்டுகாலம்,
வாழவேண்டும்;
வாழவேண்டும்;
அம்பிகையின் தரிசனத்தில்,
ஆசார்யாள் தரிசனத்தைக்
காணவேண்டும்;
காணவேண்டும்;

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சிருங்ககிரி நாயகரின்,
பதமலரைப் பணிந்துநிதம்
வாழவேண்டும்;
வாழவேண்டும்;

கருணை மழை பொழிய வேண்டும்!
காசினியைக் காக்க வேண்டும்!
அன்பு எங்கும் ஓங்கவேண்டும்!
மங்களமாய் வாழவேண்டும்!
மங்களமாய் வாழவேண்டும்!

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பொருள் விளக்கமும் குறிப்புக்களும்

(1) அனந்த சத்யானந்தம் :-

ஆரணம் : வேதம்

எல்லாம் வல்லதான : கடவுள் (Omnipotence)

எங்கும் நிறைந்த : கடவுள் (Omnipresence)

எல்லாம் அறிந்த : கடவுள் (Omniscient)

அண்டம் : அகிலம் (Macrocosm)

பிண்டம் : அண்டத்தின் நுண்மாதிரி படிவமானது. மனித உயிர் (Microcosm)

மின்காந்த நுண்அலை : இயல் உலக அல்லது அண்டத்துக்குரிய மின்காந்தத்தின் நுணுக்கமான அலை (Cosmic Rays)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

 CC-O. In Public Domain. Digitized by eGangotri

மூலக்கூறுகள் ஐந்து:- நீர் (அப்பு) காற்று (வாயு), நெருப்பு (தேயு), நிலம் (பிருத்வி), வான் (ஆகாசம்) ஆகிய பஞ்ச பூதங்கள், பிரபஞ்சத்தின் ஆதார சக்திகள், Five Elements of the Universe)

(2) நதிகளின் சங்கமம் :-

பூர்ணாநதி : ஆதிசங்கரர் பிறந்த காலடியில் பாயும் நதி.

தெளிவு :- துங்கா நதியின் தெளிவு. அதாவது இந்த நதியின் நீர் ஸ்படிகம் போன்றது. ''தெளிவு குருவின் திருமேனி காண்டல்; தெளிவு குருவின் திருநாமம் செப்பல்; தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்; தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே'' (திருமூலரின் திருமந்திரம்)

நதிக்கரை ஜனனம் :- ஸ்ரீ ஆசார்யாள் பாரதீ தீர்த்த சுவாமிகள் பிறந்த அலகுமல்லபாடு அக்ரஹாரம் (பலநாடு தாலுகா, குண்டூர் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்) நாகு லேரு நதிக்கரையில் அமைந்துள்ளது

நதிக்கரைச் சரணம் :- ஸ்ரீ மகா சந்நிதானம் ஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்த ஸ்வாமிகள் சாதுர்மாஸ்ய விரத ஸ்நானம் செய்து விட்டு வரும்பொழுது, ஸுப்ரா நதிக்கரையில் (ராஜஸ்தான், உஜ்ஜயினியில் பாயும் நதி) 16 வயது சீதாராம ஆஞ்சநேயலு (ஆசார்யாள் பூர்வாசிரமநாமம்) குருவின் திருவடியில் நமஸ்கரித்து ''சரணம்'' என்றார்.

நதிக்கரை சந்நியாசம் :- துங்கா நதியில் சீதாராம ஆஞ்சநேயலு தம்முடையவை எல்லாம் துறந்து மகாசந்நிதானம் அவர்களை நோக்கி ''குருதேவ சரணம்'' என்று கூறிப் பிரார்த்தனை செய்தார். ஸ்ரீ குரு அபயம் தந்து, சந்நியாசிக்குரிய காஷாயம், தண்டம், கமண்டலம், பாதுகை, கிருஷ்ணார்ஜுனம் ஆகியவற்றை வழங்கி மஹா வாக்கியத்தை உபதேசித்து அருளினார். 1974-ம் ஆண்டு

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

நவம்பர் 11-ந் தேதி துரிய ஆஸ்ரமம், யோகபட்டம் ஸ்ரீ பாரதீ தீர்த்தராக -36வது பீடாதிபதியாக-துறவுச் சந்நியாசம்.

நதிக்கரை பட்டாபிஷேகம் : 35 ஆண்டுகள் 35வது பீடாதிபதியாக அருளாட்சி புரிந்த ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த சுவாமிகளைத் தொடர்ந்து 36வது பீடாதிபதியாக ஸ்ரீ பாரதீ தீர்த்த ஸ்வாமிகள் பட்டாபிஷேகம் துங்காநதிக் கரை சிருங்கேரியில் 19-10-1989 அன்று நிகழ்ந்தது.

நதிக்கரை அருட்பயணம் : ஸ்ரீ ஆசார்யாள் திக் விஜயங்கள் பல நதிக்கரை நகரங்களில் நடைபெற்று வருகின்றன.

பனுவல் : ஆராய்ச்சி நூல்

(3) சிறியவனின் ஆசை :-

சிந்தூரம் : செந்நிறம், சிவப்பு வண்ணம். சிவப்பு நிறத் திலகம். அம்பிகையின் அருள் சுரக்கும் வண்ணம்; பொன் வண்ண இளமஞ்சள் சிகப்பு; தேவியின் திருவுருவின் நிறத்தை லலிதா சகஸ்ரநாம தியான சுலோகத்தில் ''சிந்தூராருண விக்ரஹாம்'' என்று குறிப்பிடப்படுகிறது அபிராமி அந்தாதியில், உதிக்கின்ற செங்கதிர் எனத் தொடங்கும் நான்கு வரிகள் அம்பிகையின் திருமேனி வண்ணத்தைக் கூறுகிறது. அபிராமி அந்தாதியிலேயே ஏழாவது பாட்டில் 4வது வரி-''துதியுறு சேவடியாய் சிந்துரானன சுந்தரியே'' என்ற வரிகளும் ஆதாரம்.

(4) பூமித்தாய் :-

மழை பொழிய வகை செய்த :- பிரம்ம தேவனின் புத்திரர் காசியப முனிவர். காசியப முனிவரின் புத்திரர் விபாண்டக முனிவர்; விபாண்டக முனிவரின் புத்திரர் ரிஷ்ய சிருங்கர். அவருடைய தலையில் மான் கொம்பு

சி—6

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

போன்ற கொம்பு இருந்ததால் ரிஷ்ய சிருங்கரை கலைக் கோட்டு முனிவர் என்பர். அங்கதேசத்தை உத்தானபாதனின் மகன் ரோமபாதன் ஆட்சிபுரிந்த காலத்தில் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டு மழையே பெய்யாத நிலைமை உருவாகி, ரோமபாதமன்னனின் அழைப்பின் பேரில் ரிஷ்ய சிருங்கர் அந்நாட்டிற்கு வருகை புரிந்ததுமே அங்கு மழைபொழிந்து நீர் வளம் பெருகிற்று. இதனால் ''மழைபெய்ய/பொழிய வகை செய்த'' எனக் குறிக்கப்பட்டுள்ளது. மேலும் விபாண்டக முனிவர் சிருங்ககிரியில் இடைவிடாமல் தவம் புரிந்த மாமுனிவர் தசரதச் சக்கரவர்த்திக்கு புத்திர காமேஷ்டியாகம் நடத்திய சிறப்பும் உடைய ரிஷ்ய சிருங்கர் தவம் புரிந்த பூமியே சிருங்கேரியாகும். இவற்றால் விபாண்டக முனி முகத்தை, ரிஷ்ய சிருங்கர் செங்கதிர் முகத்தை (குருதரிசனம் 10ல்) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. 'சாந்தாமானஸ'....பக்தி ஸுதாதரங்கிணி ஸ்லோக வரிகளும் காண்க.

யஜுர் வேதம் :- நான்கு வேதங்களில் தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்திற்குரிய வேதம் யஜுர் வேதம். வடக்கில் உள்ள பத்ரிநாத் ஜோதிர் மடத்திற்கு அதர்வண வேதம்; கிழக்கில் உள்ள பூரி ஜெகன்னாத கோவர்த்தன மடத்திற்கு ரிக்வேதம்; மேற்கில் உள்ள துவாரகை காளிகா மடத்திற்கு சாமவேதம்; ஆதிசங்கரரால் நான்கு திசைகளிலும் நிறுவப்பட்ட ஆம்னாய மடங்கள்; இவை சதுராம்னாய பீடங்கள். (உபநிடதம் ஆதாரம்).

(5) தொன்மையின் சின்னம் :-

கங்கை மூலம் :- 'மைசூர் மாநிலத்தில் சிக்மகளூர் மாவட்டத்தில், மேற்கு மலைத் தொடரில் சுமார் 1200 கி. மீ. உயரத்தில் அமைந்துள்ள கங்கை மூலம் என்ற இடத்தில் துங்கா, பத்ரா இரு நதிகளும் உற்பத்தியாகின்றன. துங்கா

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வின் முகத்துவாரம் 'கங்கை மூலம்' என்கிற உற்பத்தி ஸ்தானமாகும். (நதிகளின் சரித்திரம் என்ற இந்திய அரசாங்க ஆங்கில நூல் ஆதாரம்).

பச்சிம வாஹினி :- மேற்கு நோக்கி என்று பொருள். துங்காநதி வளைந்து மேற்கு நோக்கி பாயுமிடத்தில் இப்பெயர் வழங்கப்படுகிறது.

லிங்கமொடு ஒன்றாகி :- ரிஷ்ய சிருங்கர் வாழ்வின் இறுதியில் தம் உடல் மறையும்போது ஜோதி வடிவாகி அந்த ஜோதி அவர் வழிபட்டு வந்த லிங்கத்துடன் ஒன்றாகிக் கலந்து ஜீவப்பிரம்ம ஐக்கியமாகி சிங்கேஸ்வரர் ஆனார்.

கிக்கா :- சிருங்கேரியிலிருந்து 10 கி. மீ. தூரத்தில் ரிஷ்ய சிருங்கர் தவம் புரிந்த, சிங்கேஸ்வரர் ஆலயம் உள்ள இடம். கில்கா என்றும் கூறுவர். கீழ்க்கா மருவி கிக்கா ஆயிற்று என்பர். 7-ம் நூற்றாண்டு கல்வெட்டுக்கள் ஆதாரம்.

ஸத்ய ஸ்வரூபமாம் :- இதிலிருந்து தொடங்கி நான் என்றே நினைந்துருகச் செய்யும் என்ற வரிகள் வரை காயத்ரி மந்திரத்தைத் தழுவி எழுதப்பட்டவை.

(6) சிந்தூர விடியலில் சூரிய ஜனனம் :

சூரிய ஜனனம் :- ஸ்ரீ ஆசார்யாள் ஸ்ரீ பாரதீ தீர்த்த ஸ்வாமிகள் பூர்வாசிரமத்தில் சீதாராம ஆஞ்சநேயலு-குழந்தைப் பருவத்தில், இந்த சின்னஞ்சிறு பாலகன் முக மண்டலத்தில் 'சூரியப்ரபை' போல் ஓர் ஒளிவட்டத்தை, பாலகனின் தாய் கண்ட காட்சி, பிற்காலத்தில் இவர் சூரியனைப் போல் எண்கதிர் பரப்பி பிரகாசிப்பார் என்பது சூசகமாகும். நவகோளர்களில் ஒருவரான சூரியன் எட்டு கைகளை உடையவர். சூரியனின் அமுதகதிர் மழையைப்

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பொழிகின்ற கழுவினைக் கதிர்; சந்திரனுக்கு ஒளியை வழங்கும். அரிகேசம் ஆகிய கதிர் நட்சத்திரங்களுக்கு ஒளி தரும்: விஸ்வகர்மா என்கிற கதிர் புதனுக்கு ஒளியையும் விச்சுவா என்ற கதிர் வெள்ளிக்கு ஒளியையும், சத்துவிச்சுக் கதிர் செவ்வாய்க்கு ஒளியையும், சருவாவசுக்கதிர் வியாழனுக்கும் சுவராடு என்ற கதிர் சனிக்கும் ஒளியை வழங்கும் என்பது சாஸ்திரம் கோள்களுக்கு ஒளிதரும் ''சூரிய நாயகர் சிருங்கேரி நாயகர்'' எனச் சிறப்பித்துக் குறிப்பிடவே 'சூரிய ஜனனம்' என்று எழுதப்பட்டுள்ளது.

ஜனனம் :- 11—4—1951 (கர ஆண்டு) மிருக சீரீஷ நட்சத்திரம். வேத விற்பன்னர் வெங்கடேச அவதானி தந்தை; ஸ்ரீமதி அனந்தலட்சுமி அம்மாள் தாயார்; சூரியகுலத்து சக்கரவர்த்திகளுடன் தொடர்புடைய விபாண்டக முனி, ரிஷ்யசிருங்கர் தவப்பூமி சிருங்கேரி சாரதா பீடாதிபதி ஸ்ரீ பாரதீ தீர்த்த ஸ்வாமிகளாக திகழ இருக்கிறவர் என்பதும் குறிப்பால் உணரத்தக்கது, 'சூரிய ஜனனம்' என்று குறிப்பிட்டதால்.

(7) பண்டித ராஜ குருநாதர்:-

சந்திரன் :- நவக்கிரகங்கள் எனப்படும் ஒன்பது கோளர்களில் சந்திரன் ஒருவர். விஷ்ணுவின் திருமார்பில் பிறந்தவர் என்று கூறுவார்கள். திருப்பாற்கடலில் தோன்றியவர் என்றும், அத்திரி முனிவருக்கு அநசூயையிடம் பிறந்தவர் என்றும் மொழிவார்கள். சிவபெருமானின் ஜடாமுடியில் பால சந்திரனாகத் திகழ்பவர். தக்ஷனுடைய இருபத்தேழு பெண்களை (தாரா கணங்களை) மணந்தவர். சந்திரன் ஜோதியுடையதாம். நித்திய சத்திய வஸ்துவாம்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மெய்ப்பாட்டுச் சீர்மிகு சதுரர் :- தத்துவஞானம் (Reality of Truth), மெய்நிலை இயற்கை நிலை; இந்நிலையில் செல்வம், அழகு அருள், பெருமை, இயல்பு அளவு, திறம் மிகுந்தவர் என்பதால், இங்கே 'சதுரர்' என்று விசேஷப் பொருள் படும்படியாக எழுதப்பட்டிருக்கிறது. விஷ்ணு சகஸ்ரநாமத்தில் சதுர் பாவ (770) சதுர்வேதவித் (771) என்ற நாமங்கள் உணரத் தக்கவை. சதுரஸ்ர (938) என்ற நாமாவும் சிறப்பாகவும் உணர்ந்து கொள்ளத் தக்கது. 'சங்கரா, ஆர்கொலோ சதுரர்...' என்ற மணிவாசகரின் வரிகளும் (திருவாசகம் கோவில் திருப்பதிகம் 10) ஆதாரமாகின்றன.

(8) ஸ்ரீ பாரதீ தீர்த்த பகவான் பட்டாபிஷேகம்:-

துரிய நிலை :- ஜாக்ரதம் (விழிப்பு) ஸ்வப்பனம் (கனவு) ஸுஷுப்தி (தூக்கம்); ஆகிய மூன்று நிலைகளையும் கடந்த நிஷ்களங்கமான மெய்நிலை.

(9) தக்ஷிணத் திரிவேணி:-

பன்மொழிப் புலமையின் பரிபூரணர் :- ஸ்ரீ ஆசார்யாள் ஸ்ரீ பாரதீ தீர்த்த சுவாமிகள் ஸம்ஸ்கிருத மொழியில் பாண்டித்யம் மிகுந்தவர் என்பது பிரசித்தம். ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி முதலிய மொழிகளிலும் புலமை மிக்கவர். கூர்மதியும், நுண்மாண் நுழைபுலமும் நிறைந்தவர்; முழுமையான ஞானஸ்வரூபி.

தக்ஷிணத்திரிவேணி :- மூன்று நதிகளான கங்கை. யமுனை, சரஸ்வதி சங்கமிக்கும் அலகாபாத், திரிவேணி சங்கமமாகும். இங்கே துங்கை ஸ்படிகநீர் நதி, சிருங்கேரி ஆசார்யாள் அருள்நதி, ஸ்ரீ சாரதா தேவி கருணை

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

நதிஆகிய மூன்றும் சங்கமிக்கும் இடம்: தென்திசையான தால் தக்ஷிணத் திரிவேணி எனக் குறிக்கப்பட்டுள்ளது.

தேவி சாரதை-காவி சாரதை :- ஸ்ரீ சாரதாம்பாள் குருஸ்வ ரூபிணி; ''தேசிக ரூபேண தாசி தாப்யுதயாம்'' என்பது காளிதாசர் வரிகள்.

(10) குரு தரிசனம் :-

சாதுர்மாஸ்யம் :- அக்னி தேவனாகச் சூரியனை வழிபடு கிற வேத கலாச்சாரம், உத்தராயனம், தக்ஷிணாயனம் என்று புண்ணிய காலங்களையும், சூரியனுடன் தொடர்பு படுத்தியிருக்கிறது. தைமாதம் முதல் நாள் உத்தராயனம் ஆடி மாதம் தொடக்கநாள் தக்ஷிணாயனம்; இதையே கடக சங்கரமனம் என்பார்கள். இந்தப் புண்ணிய கால மான ஆடிமாதம் தொடங்கி ஆவணி, புரட்டாசி, ஐப்பசி ஆகிய நான்கு மாதங்களும், சாதுர்மாஸ்ய விரதகால மாகும். சாதுர் என்ற ஸம்ஸ்கிருத வார்த்தையின் பொருளே 'நான்குடன் தொடர்புடைய' என்பதாகும். பக்ஷத்தையே (15 நாட்கள்) மாதமெனக் கணக்கிடலாம் என்ற சுருதியின் அடிப்படையில் இரண்டு மாத காலத்தை சாதுர்மாஸ்யம் என்றும் விளக்கம் கூறுவார்கள். வேத விசாரம் முக்கியப் பங்கு வகிக்க, வேதவியாச பூஜை யுடனும், சந்நியாசிகள் ஒரே இடத்தில் தங்கி ஆகார நியமங்கள் முதலியவற்றுடன் விரதத்தை அனுஷ்டிப்பர். சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தில் சாதுர்மாஸ்ய விரதமும், வேதசதஸ் முதலியன தொன்று தொட்டே பிரசித்தமாகும்.

வித்யா தீர்த்த ஸேது :- சிருங்கேரியில் நரஸிம்ம வனத்திலி ருந்து சாரதா கோயில் வருவதற்கு துங்கா நதியைக் கடந்து வரும் பாலத்தின் பெயர். 35-வது பீடாதிபதி ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்தர் காலத்தில் இந்தப் பாலம் நிர்மாணிக்கப்பட்டதாகும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பிரபஞ்சக் கருப்பை :- உலகத் தோற்றத்திற்கான உற்பத்தி ஸ்தானம் (Matrix of the Universe)

தனிமுதல் :- ஒப்பின்மையான தோற்ற முதல் (Absolute)

சுயம்பு :- தானாக உண்டானது; பிரமன்; கடவுள், இயற்கை (Self Existent Being)

அகண்ட பரிபூரணம் :- பின்னமின்றி எங்கும் நிறைந்திருத்தல். (Omnipresence)

எந்தாய் :- அம்மையப்பன், தாய்—தந்தை, மாதா—பிதா என்றாலும், தந்தை—தாய், அப்பா—அம்மா, பிதா—மாதா என்றாலும் ஒன்று முதலாவதாகவும், மற்றொன்று இரண்டாவதாகவும்தான் அமையும். சமமாக, ஒன்றாகவே குறிக்கும் முகத்தான் 'எந்தாய்' என்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 'என்தாய்' என்பதை நீட்டி விளித்தாலும், என் தந்தை என்பதை நீட்டி விளித்தாலும், எந்தாய் ஆகவும், என் தந்தை—எந்தை—எந்தாய்—ஆகவும் அமையும். (ஆதாரம்; குமரகுருபர சுவாமிகள் பாடியருளிய பொறியரவு அல்குல் எந்தாய்......வரிகள்)

பாரிஜாதப் புனித முகத்தை :- ஐந்து தெய்வத் தருக்களில் பாரிஜாதம் புனிதமான ஒன்றாகும். நினைத்ததைத் தரவல்லது. கண்ணன், சத்தியபாமைக்காக பாரிஜாதத்தை பூவுலகிற்கு கொண்டு வந்தார். குருமுகம் சிஷ்யர்களுக்கு நினைத்ததைப் பெற அருள்தரும்.

சதாசிவமுகம் :- குரு பரம்பரையில் முதல் குரு சதாசிவர். அவரே ஸ்ரீமந் நாராயணன் திருவடிவம் கொண்டு தமது நாபிக் கமலத்திலிருந்து சிருஷ்டி தேவனான பிரம்மதேவனைப் படைத்தார். நாராயண வடிவத்திலிருந்த சதாசிவமாகிய பரமசிவரே நான்முகனாம், பிரம்மாவுக்கு ஆத்ம

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஞானமாகிய பிரம்ம வித்யை உபதேசித்தார். சதாசிவர், நாராயணர், நான்முகர் மூவரும் திவ்ய பரம்பரையாவர்.

பஞ்சமுகம் :- திவ்ய பரம்பரையைத் தொடர்ந்து வசிஷ்டர், சக்தி, பராசரர், வேதவியாசர், சுகர் ஆகிய ஐவரும் ரிஷி பரம்பரையாவர். வம்சவழி புத்திரர்களான குரு, சிஷ்யர் களாவர்.

இருமுகம் :- கௌடபாதரும் கோவிந்த பகவத் பாதரும் ஆசிரியர் மாணவர் நிலை குரு சிஷ்ய பரம்பரையைத் தோற்றுவித்த மகான்கள். ஆசார்ய பரம்பரை உதய மாகிறது.

வார்த்திகம் :- இது மூன்று வகைப் சிறப்புக்களைப் பெற் றிருக்கும். மூலநூல் கூற்றை எடுத்துக் கூறல்; மூலநூலில் கூறப்படாததையும், எடுத்துக் கூறல்; சில இடங்களில் மூல நூலில் உள்ளவற்றுக்கு மாறுபட்ட விளக்கத்தைக் கூறல்; இவை முறையே உக்த, அனுக்த, துருக்த எனப்படும் "உக்தானுக்த துருக்தார்த்த வியக்தி (சிந்தா) காரிது வார்த்திகம்." அதிகாரி பேதத்தை ஸமன்வயப்படுத்து வதே வார்த்திக இலட்சியம்.

மானஸோல்லாஸம் :- ஆதிசங்கரரின் தக்ஷிணாமூர்த்தி சுலோகத்திற்கு சுரேஸ்வரர் அருளிய வார்த்திக உரை மானஸோல்லாஸம்; சுரேஸ்வரர் வார்த்திகக்காரர் என்றும் அழைக்கப்படுகிறார்.

சதுர்முகம் :- ஆதிசங்காரின் சிஷ்யர்களான ஸ்ரீ சுரேஸ்வ ராச்சாரியார் (சிருங்கேரி சாரதா பீடம்) ஸ்ரீ பத்மபாதர் (துவாரகா காளிகா பீடம்) ஸ்ரீ தோடகர் (பத்ரிநாத் ஜோதிர்மடம்) ஸ்ரீ ஹஸ்தாமலகர் (பூரி ஜகன்னாத் கோவர்த்தன மடம்) ஆகிய நால்வரும் நான்கு பீடங்களின்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

முதலாவது பீடாதிபதிகள் என்பதைக் குறிக்கும். சிருங்கேரி சாரதா பீடம் தொன்மையான பீடம் என்பதால் ஆசார்யாள் முகம் சதுர்முகம் எனச் சிறப்பிக்கப்பட்டுள்ளது

ஆதிஸப்தமுகம் :- சிருங்கேரி சாரதா பீடத்தில் ஆதிசங்கரர், ஸ்ரீ சுரேஸ்வராச்சாரியார் இருவரையும் தொடர்ந்து, பீடாதிபதிகளான ஸ்ரீ நித்ய போதகனாச்சாரியார், ஸ்ரீ ஞானகனாச்சார்யாள், ஸ்ரீ ஞானோத்தமச்சார்யாள், ஸ்ரீ ஞானகிரி ஆச்சார்யாள், ஸ்ரீ ஸிம்ஹகிரியாசார்யாள், ஸ்ரீ ஈசுவரதீர்த்தர், ஸ்ரீ நரசிம்ம தீர்த்தர் ஆகிய எழுவரைக் குறிக்கும்.

லம்பிகா யோக நிஷ்டர் :- குண்டலினியோகம் செய்கிறவர்கள் தம்முடைய நாக்கை உட்புறமாக மடக்கிய வண்ணம் இந்திரயோனியை அடைத்துவிடுவார்கள். ஸ்ஹஸ்ராரத்தில் பெருகும் அமுதம் சுஷிம்னா வழியாகக் கீழே இழிந்து, உடம்பின் எல்லா நாடிகளையும் நனைக்கும். அதனால் அவர்களுடைய உடம்பு வஜ்ரசரீரமாக ஆவதுடன், அவர்கள் நினைத்த உருவத்தை எடுக்கும் பேராற்றலையும் பெற்றுவிடுகிறார்கள். இறுதியில், நம் கண்களுக்குத் தெரியாமல் மறைந்து விடுவார்கள். A search in Secret India மற்றும் A search in secret Egypt ஆகிய இரு ஆங்கில நூல்களில் ஆசிரியர் பால் பிராண்டன் இதுபற்றி எழுதி, நூறு ஆண்டுகள் வாழ்ந்தவர்களைச் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு நாக்கினால் தொண்டை துவாரத்தை அடைப்பதை ''கேசரீ முத்திரை'' என்பார்கள். ஸ்ரீ வித்யா சங்கர தீர்த்தர்(1229-1 3) போன்றோர் இந்த யோகநிலையில் இருந்து தான், தாம் மனத்தில் நினைத்து விருப்பிய உருவத்தை எடுத்தும், அந்த புது உருவத்திலி

Sri Vidyabharathi Book Centre, Sringeri

 CC-O. In Public Domain. Digitized by eGangotri

ருந்து அனைவருக்கும் அருள்வழங்கவும் முடிந்தது. அந்த உருவமே சதுர்மூர்த்தி வித்யேச்வரார் என்கிற சிலைவடிவமாகும்.

சதுர்மூர்த்தி வித்யேச்வரர் திருமுகம் :- சிருங்கேரிக்கடுத்த ஸிம்ஹகிரியில் ஓர் அபூர்வமான உருவம் கல்லில் உருவாக்கப்பட்டிருக்கிறது நான்கு பக்கமுடைய அக்கல்லில் நடுவில் வித்யாசங்கர தீர்த்தர் உருவமும் அருகருகே பாரதீ கிருஷ்ண தீர்த்தர், வித்யா ரண்யர் ஆகிய இரு சிஷ்யர்களின் உருவமும் செதுக்கப்பட்டிருக்கின்றன. கல்லின் மற்ற மூன்று பக்கங்களிலும் பிரம்மா, விஷ்ணு, மஹேச்வரர் ஆகிய மூவரின் உருங்களும் வடிக்கப்பட்டுள்ளன. ஆசார்யாள் திருவுருவின் மேல்புறம் லட்சுமி நரஸிம்மர் வடிவமும், அதற்கும் மேல் சிவலிங்க உருவமும் செதுக்கப்பட்டுள்ளன. இந்த விசித்திரமான சிலாரூபம் வடித்து முடித்ததும் ஸ்ரீ வித்யாசங்கர தீர்த்தர், அச்சிலாரூபத்திற்கு சதுர்முர்த்தி வித்யேச்வரர் என்று நாமமிட்டார். பாரதீ கிருஷ்ணதீர்த்தரிடம், பூமிக்கடியில் ஒருபிலத்தில் தாம் பன்னிரு ஆண்டுகள் யோக நிலையில் இருந்து இந்த சிலாரூபம் போன்றதான உருவத்தை தாம் அடையப் போவதாகவும் தெரிவித்திருந்தார். அவ்வாறே, துங்கா நதியின் வடக்குக் கரையில் ஒரு பிலம் தோண்டி, ஓர் அறைபோன்று நிர்மாணிக்கப்பட்டு, ஆசார்யாள் அதனுள் இறங்கி அமர்ந்து கொண்டதும் மேல் வாசல் மூடும்படியாக ஆக்ஞையிட்டார். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு புதிய பீடாதிபதி திக் விஜயம் சென்றிருந்த சமயம், சிலர் ஆவல் காரணமாக, மேல் வாசலைத் திறந்தார்கள். பிலத்தினுள்ளே ஆசாரயாள் பூத உடல் இல்லை. அங்கே ஸிமமகிரி சதுர்மூர்த்தி வித்யேச்வர மூர்த்தி உருவத்தின் மேலுள்ள லிங்கவடிவம் இருப்பதைக் கண்ணுற்றார்கள். புதிய பீடாதிபதி வந்து இதனைக் கேள்வியுற்று, மேல் வாசலை மூடி அதன்மேலே சிவலிங்கம் பிரதிஷ்டை செய்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தார். ஆலயம் எழுப்பப்பட்டு வித்யாசங்கரர் ஆலயமாகத் திகழ்கிறது.

ஏகசிலா சகோதரர் இளையமுகம் :- ஆந்திராவில் உள்ள வாரங்கல்லில் ஏகசிலா நகரம் அமைந்துள்ளது. ஏகசிலா நகரத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவரில் மூத்தவர் ஸ்ரீ வித்யா ரண்யர். இளையவர் ஸ்ரீ பாரதீகிருஷ்ண தீர்த்தர். வித்யா சங்கர தீர்த்தரைத் தொடர்ந்து பாரதீ கிருஷ்ண தீர்த்தரும் பின்னர் வித்யாரண்யரும் பீடாதி பதிகளாக அருள் ஆட்சி புரிந்தனா.

காலடிக் கண்முகம்:- ஸ்ரீ ஜகத்குரு ஆதிசங்கர பகவத் பாதர் பிறந்த காலடியில் சங்கரரின் ஜென்ம பூமி— அவதரித்த புனித இடத்தைக் கண்டுபிடித்த சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தின் 33-வது பீடாதிபதி ஸ்ரீ சச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ம பாரதீ சுவாமிகளைக் குறிக்கும். 1895 முதல் 1906 வரை 11 ஆண்டுகள் தொடர்ந்து முயற்சி; காலடியின் கண்ணான இடம் சங்கரர் பிறந்த இடமல்லவா. அந்த இடத்தைக் கண்டு பிடித்ததைச் சிறப்பிக்கும் வகையில் காலடிக் கண்முகம் என்று கூறப் பட்டுள்ளது. 1910-ல் சங்கர ஜெயந்தியைக் கொண்டாடும் வழக்கத்தை உருவாக்கியவரும் சிருங்கேரி ஆசார்யாள் அவர்கள்தான். காலடியை உலகக் கண்முன் நிறுத்திய பெருமைக்குரியவர் இவரே.

மகாவாக்கியம் :- உபநிடத மகாவாக்கியங்கள் நான்கு உள்ளன. 'அகம் பிரம்மாஸ்மி' என்ற மகாவாக்கியம் சிருங்கேரி பீடத்திற்கு உரியது என்பதைக் குறிக்கிறது. 'தத்வமஸி' துவாரகை பீடத்திற்கும், அயம் ஆத்மா பிரம்மம் ஜோதிர் மடத்திற்கும், பரக்ஞானம் பிரம்மா என்பது பூரி கோவர்த்தன மடத்திற்கும் உரியனவாகும்.

தசநாமி சந்யாசி முகம் :- ஆதி சங்கரரால் நிறுவப் பட்டு ஏற்கப்பட்டுள்ள நான்கு மடங்களுடன் இணைந்த

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

யோக பட்டங்களுக்கு உரியவர்களே தசநாமி சந்யாசிகள் என்று அழைக்கப்படுவாரகள். தசநாமி—பத்துநாமம். மகாவாக்கியங்களுடன் இணைந்த நான்கு மடங்களுக்கு உரியது. கும்பமேளாவில் கலந்து கொள்ள தசநாமி சந்நியாசிகள்தான் தகுதி உடையவர்கள். ஹர்ஷ சக்கர வர்த்தி காலத்திலேயே கும்பமேளா நிகழ்ந்திருப்பதாகத் தெரியவருகிறது. மாதவிய சங்கரவிஜய ஆதாரத்தின்படி சிருங்கேரி பீடாதிபதிகள் தசநாமி சந்நியாசிகள். அதனால் 36வது பீடாதிபதியாக அருளாட்சி புரியும் ஸ்ரீபாரதீ தீர்த்த ஸ்வாமிகள் முகம் தசநாமி சந்யாசி முகம் என்று குறிக்கப்பட்டுள்ளது. இராமகிருஷ்ணா மடத்தின் தலைவர் தபஸ்யானந்தா ஸ்வாமிகள் இதனை நிலைப் படுத்தி நூல் எழுதியுள்ளார்.

ஸர்வதேவதா மயன் முகம் :- குருவே பிரம்மா; குருவே மகாவிஷ்ணு; குருவே பரமேசுவரன் என்கிறபடியால் திரிமூர்த்திகளையும் அவர்களுக்கு கீழ்ப்பட்ட ஸகல தேவ தைகளையும் தனித்தனியே உபாஸித்தால் எந்தெந்த பலன்கள் கிடைக்குமோ, அத்தனை பலன்களும் குரு ஆராதனம் ஒன்றினால் கிடைக்கும். அதை வைத்துத் தான் குருவை ஸர்வதேவதா மயன்என்று சொல்வது குரூர் பிரம்மா, குரூர் விஷ்ணு; குருர் தேவோ மகேச்வர. குருசாஷாத், பரம்பிரம்ம, தஸ்மை ஸ்ரீகுருவே நம: என்று சுலோகம் மொழிகிறது.

சந்திர கலை முகம்:- ஸ்ரீ சாரதா தேவி-ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தி இருவருடைய தியான சுலோகங்களில், ஒரே மாதிரி வர்ணித்திருப்பதைக் காணலாம்.

''ஸ்படிக ரஜதவர்ணம் மௌக்திகீ மக்ஷமாலாம் அ்ருத கலா வித்யா ஞானமுத்ரா கராப்ஜை: தத்தமுரக கக்ஷம் சந்திரசூடம் த்ரிணேத்ரம் வித்ருத விவித பூக்ஷம் தக்ஷிணாமூர்த்தி மீடே''

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தக்ஷிணாமூர்த்திக்கு நான்கு கைகள்; இவைகளில் ஜபமாலை, அம்ருதகலசம்; புஸ்தகம், சின்முத்திரை, இவைகளைத் தரித்திருக்கிறார். சாரதா மூர்த்திக்கும் இதே லங்காரம்தான். இருவருக்கும் சந்திர கலை உண்டு என்பதாக ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்தசுவாமிகள் (35வது பீடாதிபதி) அருளியுள்ளதையும், "சோமன் உடுத்தினால் தக்ஷிணா மூர்த்தி, புடவை உடுத்தினால் சாரதை" என்று அந்த சுலோக அர்த்தப் பொலிவின் அற்புதத்தை அமிருத மொழியாக ஸ்ரீ சந்திரசேகர பாரதீ சுவாமிகள் (34வது பீடாதிபதி) அருளியுள்ளதையும் ஆதாரமாகக் கொண்டு, ஸ்ரீ பாரதீ தீர்த்த ஸ்வாமிகள் (அருளாட்சி புரிகிற 36வது பீடாதிபதி) திருமுகம் தக்ஷிணாமூர்த்தி முகமாகவும், சாரதாதேவி முகமாகவும் பொலிகிறதைக் குறிக்கும் வகையில் சந்திரகலை முகம் என்று சால்லப்பட்டிருக்கிறது.

தியான, பூஜா, மந்திர, மோக்ஷமூல முகம்:- தியானத்துக்கு ஆரம்ப இடம் குருவடிவம்; பூஜைக்கு ஆதார பீடம் குருவின் திருவடிகள்; மந்திரத்தின் ஒலி ரூபமாக இருப்பது குருவின் வாக்கு; முக்திக்கு வேறாகி வலுத் தருவது குருவின் கடாக்ஷம். குரு உருவம் இறைவடிவினும் மேலாகும்.

"த்யான மூலம் குரோர் மூர்த்தி;
பூஜா மூலம் குரோர் பதம்;
மந்திர மூலம் குரோர் வாக்கியம்,
மோக்ஷ மூலம் குரோர் க்ருபா"

என்ற சுலோகத்தை ஆதாரமாகக் கொண்டு பூவுலகை அருளாட்சி புரிந்து வரும் சிருங்கேரி நாயகர், 36வது பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீ சாரதா பீடாதிபதி, ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்களின் குருமுகம், தியான, பூஜா, மந்திர, மோக்ஷ மூல முகம் என்று சிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ★

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

நூலாசிரியர் பற்றி...

சிருங்கேரி நாயகருக்கு சிந்தூர ஆரத்தி என்னும் குரு பக்தி இலக்கியத்தின் முதலாவது சிறுகாவியமான இந்நூலின் ஆசிரியர் டாக்டர் கே. ராமமூர்த்தி, தாமிர பருணி நதிக்கரையில் உள்ள கல்லிடைக் குறிச்சி ஸ்ரீ கே. எஸ். குளத்து அய்யர் அவர்களின் குமாரர்.

'பாரதி காவலர்' என்று பொது வாழ்வு இலக்கிய உலகில் அழைக்கப்படும் இவர் பல நூல்கள் எழுதியுள் ளார். சிறந்த சொற்பொழிவாளர், தமிழிலும் ஆங்கிலத் திலும் எண்ணற்ற ஆய்வுக் கட்டுரைகளும், கவிதைகளும் இயற்றி உள்ளார். ஆய்வு முனைப்புடைய சிந்தனை யாளர்களில் ஒருவர் எனப் பாராட்டுப் பெற்றவர்.

மகாகவி பாரதி இலக்கியத்துக்கு இவரது பங்கு அங்கீ காரம் பெற்றதாகும். ஐம்பது நாடுகளுக்கு பாரதி இலக்கி யத்தை மொழி பெயர்த்து அறிமுகப்படுத்தி ஐக்கிய நாடுகள் சங்க எழுத்தாளர் ஸொஸைடியின் பாராட்டுப் பெற்றவர். அமெரிக்காவின் இனாகூல்பிர்த் இலக்கிய அமைப்பின் 'அவார்ட் ஆப்மெரிட், இத்தாலிப் பல்கலைக் கழகத்தின் 'அகாடமிக் டொனாரோ' கௌரவப்பட்டமும், இங்கிலாந்து, தாய்லாந்து, மலேசியா, இலங்கை நாடு களின் பெரிய இலக்கிய அமைப்புக்கள் இவருக்கு விருதும் பாராட்டும் வழங்கிச் சிறப்பித்துள்ளன.

சர்வதேசக்கவிஞர் அகாடமி, முன்மாதிரியான சர்வ தேசக் கவிஞர்'' என்னும் சிறப்பு விருதினை இவருக்கு அளித்து, 'பெலோஷிப்' கௌரவம் வழங்கியுள்ளது. ஆதிசங்கரரின் மாத்ரு பஞ்சகத்தில் இவரது ஆய்வு பேரா சிரியர் டாக்டர் டி எம் பி. மகாதேவன் போன்றவர் களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதன் ஆங்கில ஆக்கம்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

நியுயார்க், ஸான்பிரான்ஸிஸ்கோ போன்ற வெளிநாட்டு மேயர்களின் பாராட்டை பெற்றுள்ளது.

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸ்ரீ ஆதிசங்கரரின் அன்னபூரணி ஸ்தோத்திரத்தை ஜகத்குரு சங்கராசார்ய ஸ்வாமிகளின் அருளாசியுடன் தமிழ்ப் பாமாலையாக்கி காசி அன்னபூரணி ஆலயத்தில் அரங்கேற்றி உள்ளார். அதன் பொருட்டு வாரணாசியில் உள்ள வேதமீமாம்ஸ ரிஸர்ச் ஸெண்டரின் டைரக்டர் வித்யா வாசஸ்பதி வித்யாசாகர் பண்டிதராஜ ஸ்ரீ பி. என் பட்டாபிராம சாஸ்திரி அவர்கள் இவருக்கு 'கவிமௌக்திகம்' என்னும் விருது வழங்கி அம்பாள் சந்நிதியில் கௌரவித்துள்ளார்.

காசியில் உள்ள அனுமான் கட்டத்தில் பண்டிட்காளிப் பிரசாத் திரிபாதி கவிஸம்ரக்ஷக் எனும் பட்டமளித்து சிறப்பித்துள்ளார். ஸ்ரீ யாக்ய வல்கியர் வேதபீடம் 'சங்கர பாரதி வாசகமணி' விருதையும் சென்னை உபநிக்ஷத் ஆசிரமம் 'பாரதி அறிஞர்' விருதையும் வழங்கி உள்ளது. பாரதி பிரசங்க ரத்னாகர, பாரதி கலாநிதி, பாரதி சாகரம், பாரதியச் செல்வர், ஸேவா ரத்னம், பக்த பூஷணம், இதயபாரதி, பாரதிச்சுடர், சிந்தனைச் செங்கதிர், பாரதி திக்விஜயதிலகம் ஆகிய பட்டங்கள் இவர் பெற்று உள்ள பல விருதுகளில் குறிப்பிடத் தக்கவையாகும்.

இதுகாறும் பதினைந்து நூல்கள் எழுதியுள்ள இவர் சிறந்த மொழி பெயர்ப்பாளரும் ஆவர். ஆதிசங்கரரின் மந்த்ர மாத்ருகா புஷ்டமாலா ஸ்தவம், ஏகஸ்லோக மாத்ரு ஸ்துதி, ஸ்ரீ சாரதா புஜங்க ப்ரயதாஷ்டகம், தோடகரின் தோடகாஷ்டகம், ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகளின் ஸ்ரீ லக்ஷ்மி ந்ருஸிம்ம பஞ்சகம், ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளிய அபிநவ வித்யா தீர்த்த அக்ஷர மாலா தோத்திரம், ஸ்ரீ ஐயப்ப தோத்திரம் ஆகியவற்றை தமிழாக்கம் செய்து உள்ளார். இவர் எழுதியுள்ள குருநமஸ்காரம் நூல் சிருங்கேரிச் சிஷ்யர்களால் வரவேற்கப்பட்டதாகும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

குரு பக்தியினால்தான் தமக்குச் சிறப்புக்கள் கிடைக்கின்றன என்று மனமாரக் கூறுகிற இவர், இந்தக் காவியத்தை ஒரு வேள்வியாகக் கருதி பக்தி சிரத்தையுடன் இயற்றி உள்ளார். குருபக்தியுடன், தெய்விகச் சுடர் என்னும் நாளிதழ் அளவில் ஒரு சிறப்பிதழைக் கொண்டு வந்த பெருமைக்குரியவர். இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள பல பல்கலைக் கழகங்களில் ஆய்வுரை நிகழ்த்தி உள்ளார்.

''நண்பர் டாக்டர் இராம மூர்த்தி அவர்களின் கலை வண்ணமும் கருத்து வண்ணமும சிந்தனை சுடரொளியில் பட்டொளி வீசி நம்மைப் பரவசப்படுத்துகின்றன. பாரதி காவலர் என நாடறியப்பட்ட சிந்தனைச் செங்கதிர், பாரதி காவலர்'' என்று தமிழ்ப் பேரறிஞர் டாக்டர் அவ்வை நடராசன் (துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை) பாராட்டியுள்ளது, சிந்தையில் கொள்ளத் தக்கதாகும்.

—பதிப்பகத்தார்



CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

With best compliments from :

GANESH TRAVELS

Tourist Transport Operators
(Recognized by Govt of India)

MADRAS HEAD OFFICE :
35/1, P.C.O. Road, Egmore,
MADRAS-600 008.
PHONE : 825 2345, 825 0066, 825 4243
825 0202, 825 4444
TELEX : 041-8724, GTMS-IN

MADRAS SUB - OFFICE
Plot No. 7, VGP. Murphy, Square.
GST Road, MADRAS - 600 016.
PHONE : 2347300

BANGALORE OFFICE :
9, Pampamahakavi Road, Shankarapuram
BANGALORE - 560004.
PHONE : 607428, 607639, 623663, 626570 (Res)
TELEX : 0845 - 2084 CTPR - IN

OPERATES ROUND THE CLOCK

Sri Vidyabharathi Book Centre, Sringeri

The Western India Industrial Corporation Limited

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Regd. Office:

4581, Narasimharaja Mohalla, Mysore-570007.

Board of Directors:

1. Sri P. R. Hariharan (Chairman)
2. Srl P. R. Venkatesan
3. Sri Viswanath Subramanyam
4. Sri H. Ramakrishna
5. Sri A. D. Ramaswamy
6. Smt. Kalpana Ramachandra

Lakshmi General Finance Limited

For all your requirements in Hire Purchase of Automobiles & Machinery and Equipment Leasing

Please call on us fot service with a smile

Administrative Office : DESABANDHU PLAZA,
47, Whites Road,
Madras-600 014.

BRANCHES IN TAMILNADU, ANDHRA PRADESH, KARNATAKA & KERALA

Phone : 861981 (4 Lines)

Telex : 041-6991 LGF IN
041-5380 LGHO IN

(Regd. Off : 21 Patullos Road, Madras-600002)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri



With best compliments from :

Mohan Sreenivas and Associates

Race View Towers, 71, Mount Road,
Guindy, Madras-32.

Tel : (044) 234 9112
Fax: (044) 483 4661

Sri Vidyabharathi Book Centre, Sringeri

KOTHARI ORIENT FINANCE LTD. of The House of Kotharis Offers an attractive package of Hire Purchase and Leasing Services innovatively designed to meet the financial needs of small medium and large industries for machinery, vehic'es and also consumer durables such as Television, Refrigerators, etc. Also offers attractive rates on FIXED DEPOSITS.

For Details Pleaae Contact

KOTHARI ORIENT FINANCE LIMITED

Regd Office :
'Kothari Buildings'
114 Utthamar Gandhi Road
Madras 600 034
Phone : 472131/474376/
474901
Grams : KOTHARI
Telex : 8325
Fax : 0091-44-8256464

Admn. Office :
'Prestige Point' I Floor
16 Haddows Road
Madras 600 006
Phone : 8256164/
8256170/8256171

CC-O. In Public Domain. Digitized by eGangotri

With best compliments from:

M/s. Mahindra
&
Mahindra Limited

◉

□ BOMBAY □ MADRAS
□ CALCUTTA □ NEWDELHI

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-0. In Public Domain. Digitized by eGangotri

திரு.வி.க.நகர் பெனி:பிட் :பண்டு லிமிடெட்

ஸ்தாபிதம் : 1989

தலைமை அலுவலகம் : 10, 2வது தெரு, ஆண்டாள் அவின்யு, (திரு.வி.க. நகர் அருகில்), சென்னை : 600082. போன் : 610390

பாரீஸ் கிளை : 49, வெங்கடாசல முதலி தெரு, முதல் மாடி, (கந்தசாமி கோயில் அருகில்), பார்க் டவுன், சென்னை - 600003. போன் : 565760

பென்ஷனர் டெபாசிட்

குறைந்த பட்ச டெபாசிட்	காலம்	வட்டி விகிதம்
ரூ. 10,000	1 வருடம் 2 வருடங்கள் 3 வருடங்கள்	21%

★ இத்திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்றோர், 50 வயது அடைந்தோர், விதவைகள், உடல் ஊனமுற்றோர் மற்றும் கல்வி, சமய அறக்கட்டளைகளும் பயன் பெறலாம்.

★ பிரதி மாதம் வட்டி வழங்கப்படும்.

★ வட்டிக்குரிய காசோலைகள் முன்னதாகவே அளிக்கப்படும்.

வைப்பு நிதி

காலம் (மாதங்கள்)	வட்டி விகிதம் ரூ.10,000க்கு கீழ்	வட்டி விகிதம் ரூ.10,000 மும் அதற்கு மேலும்
12	17%	18%
24	18%	19%
36	19%	20%

ஐஸ்வர்யா டெபாசிட்

டெபாசிட் தொகை	காலம் (வருடங்கள்)	கால இறுதியில் பெறும் தொகை
ரூ.1,000	10	6,919
	15	18,885
	20	52,827
	23	95,760

★ மாதாந்திர சேமிப்புத் திட்டத்தில் பிரதி மாதம் ரூ.25 செலுத்தி 12 மாதங்கள் கழித்து ரூ.330 பெறுங்கள்.

★ சேமிப்புக் கணக்கில் உள்ள நிலுவை தொகைக்கு நாள் தோறும் 12% P.A. வட்டி வழங்கப்படும்.

★ நகையின் பேரில் ஒரு சவரனுக்கு ரூ.2,500 வரை கடன் வழங்கப்படும்.

★ பங்குதாரர்களுக்கு மட்டும் • ரூ.1. செலுத்தி ஒரு பங்கு பெற்றுக்கொள்ளுங்கள்.

★ இது சீட்டு நிறுவனம் அல்ல.

வார விடுமுறை : தலைமை அலுவலகம் : செவ்வாய்; பாரீஸ் கிளை : ஞாயிறு.

Ideal/93

★ பாதுகாப்பான முறையில் சேமித்து வளருங்கள் ★

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

With Best Compliments From

Sundaram Finance Limited

THE PEOPLE TO TRUST IN COMPANY DEPOSITS,

Hire Purchase & Equipment Leasing

REGD. OFFICE :

21, Patullos Road, Madass-600 002.

Phone : 860081/860391 Grams : SUNFINANCE

Telex : 041-6276 SF IN 041-6440 SF IN

Fax : 860356

CITY BRANCHES

Adyar	Parry's Corner	Anna Nagar
Ph. 414666	Ph. 5341285	Ph. 6213812
414556	5341663	

With best compliments from :

MADHURAMS

Enterprises ✲ Constructions

DairyFarm

33-C, Thiruvengadam Street

R. K. Puram : : Madras-600 028

Phone : 837872-839122.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri



With Pranams to
Sri Jagadguru Sankaracharya
H. H. Sri BharathiTheertha Mahaswamigal
FROM
S. KANNAN
B.Tech., M.B.A.,
5, Deep Sarita Apartments
Ganesh Gali, Mani Nagar
Ahmedabad-380008.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ViswapriyA

-Valuable to all-

Our endeavour to be of value to all—CUSTOMERS, PRINCIPALS, STAKE-HOLDERS AND THE SOCIETY stems from inherent values of warmth and concern in every facet of our activity

Be it......

- Innovative financial services or nurturing young talent in arts :
- Property related services or preservation of our cultural heritage :
- Trading services or support of social causes :

By......

> Placing the other person's interest at the forefront:
> Respecting their point of view :
> Feeling concern for them :
> Displaying objectiviiy in supporting arts, culture. and social causes :

★ It may not be easy : but the mutually beneficial relationship makes it worthwhile.

ViswapriyA
GrouP

'VISWAPRIYA' Kasturba Nagar, Adyar Madras-600 020.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

UNIQUE HOLIDAY IDEAS FROM

TRANS INDIA RESORTS LIMITED



Where the service and decor will humble the view outside.

Bookings now open for Lake Castle Ooty.
Coming up soon at other centres like
Kodaikanal, Nainital, Courtalam, Goa . . .
Write today for, a free brochure on our
ownderful holiday ideas.

HOME RETREAT

TRANS INDIA RESORTS LIMITED

VIII Floor, Guna Building (Annexe), 305 Mount Road,
Madras 600 018. Tel : 459137/450946

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

With Best Compliments from

The Madras Advertising Co Ltd

861 Anna Salai Madras-600 002
Phones : 834071/835987

BRANCH OFFICES

'Badami House'
Sri Narasimharaja Square
Bangalore 560 002

Phones : 211263/2113[illegible]8

3—6—361 (Behind Lady Hydari Club)
Himayat Nagar
Hyderabad 500 029
Phone : 242246

LIAISON OFFICES

M I G 1—B—56
MVP Colony
Visakhapatnam 530 017
Phone : 51857 (PP)

M R Comples, I Floor
51/28-F Diwan Bahadur Road, R S Puram
Coimbatore 641 002
Phone : 47549

B—1 Sayeed Complex,
I Floor XL/7629,
Doraiswamy Iyer Road
COCHIN 682 035
Phone at : 366438

With Compliments From

India Motor Parts & Accessories Limited

21, Patullos Road,
Madras-600 002.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

With Best Compliments From

Sri Guru Packaging Private Ltd.,

136, Arcot Road
Madras-600 093
Phone : 427598 : : 423565.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

With Pranams to Sri Sri Jagadguru
Sri Bharathi Theertha Swamigal
From

Worldwide Agencies

13-A, Thriuvengadam Street,
West Mambalam, Madras-600 033

Phone : 4334551

Wiih Pranams to
His Holiness
Jagadguru Sri Sankaracharya Mahaswamigal
of Sri Sringeri Sarada Peetam
From

Sri Gurukrupa Builders

4, Slr Krishnan Nair Road
T. Nagar, Madras-600 017
Phone : 884027

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

With Best Compliments From

Taj Coromandel Hotel

(MEMBER—THE TAJ GROUP OF HOTELS)

17, Nungambakkam High Road

Madras-600 034

PHONE : 8272827

CABLE : "HOTELORENT"

TELEFAX : 044—8257104
044—8270060

TELEX : 041—7194 TAJM IN
041—6720 TAJM IN

Sri Vidyabharathi Book Centre, Sringeri

Sundaram Motors
CC-O. In Public Domain. Digitized by eGangotri
The One Stop Shop
FOR
Vehicles Service Spares

Sundaram Motors

180 Mount Road
Madras-600 006

Bangalore Mysore Mangalore Hubli Gulbarga
Shimoga Bellary Goa Secunderabad Visakhapatnam
Vijayawada Cuddapah Vellore and Poonamailee

YOU CAN TRUST TVS

With All Good Wishes
FROM

Simpson & Company Ltd.,

861/862, Anna Salai,
Madras-600 002

Branches :

Bangalore : : Ootacamund
Tiruchirapalli : : Secunderabad

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

With Best Compliments From

Ramco Industries Limited

'Auras Corporate Centre' VI Floor,
98-A, Dr. Radhakrishnan Road,
Post Box No. 2949,
Mylapore, MADRAS. 600004

PHONE : 830377 TELEX : 041 6010
GRAMS : BESTROOF FAX : (044) 830579

Manufacturers of

Asbestos Cement Roofing Sheets, Building Boards, Accessories, Asbestos Cement Pressure Pipes :

Cotton Yarn :

Electronic Hardware : and
Development of Software

Sri Vidyabharathi Book Centre, Sringeri

தி மயிலாப்பூர் இந்து சாசுவத நிதி லிமிடெட்

CC-O. In Public Domain. Digitized by eGangotri

(ஸ்தாபிதம் : 1872) : : போன் : 71099, 71230

பதிவு அலுவலகம் : 32 & 33, தெற்கு மாடவீதி
மயிலாப்பூர்—சென்னை-600 004.

கிளைகள் : பார்க்டவுன், வண்ணாரப்பேட்டை, சைதாப்பேட்டை, அடையாறு, அமைந்தகரை மற்றும் கோடம்பாக்கம்

பிக்சட் டெபாசிட்
(Fixed Deposit)

3	மாதங்கள்	12%
6	,,	14%
1	வருடம்	15%
2	வருடங்கள்	16%
3	,,	17%

மறு முதலீட்டுத் திட்டம்
(Re-Investment Deposit)
டெபாசிட் தொகை ரூ.1000/-

மாதங்கள்	தொகை
12	ரூ. 1170
24	1400
36	1660
50	2020
78	3000
120	5420
180	12640

நகைக் கடன் மற்றும் வீட்டு அடைமானம் பெயரில் கடன் வழங்கப்படும். மற்ற விபரங்களுக்கு செயலாளர்க்கு விண்ணப்பிக்கவும்.

S. கிருத்திவாசன் — துணைத் தலைவர்
R. சம்பந்தம் — ஆக்டிங் செயலாளர்
A. துரை — தலைவர்

பங்குதாரர்கட்டு : : : ஒரு பங்கின் விலை
மட்டும் : : : ரூ. 1/-மட்டும்

With Pramams to Gurudev

T.S. Srinivasan & Associates

Textile Engineers & Consultants
Gita Lodge—Coimbatore-18.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri



With Pranams To
SRI JAGADGURU, SRINGERI
SHANKARACHARYA SWAMIGAL
From
M. Venkatesh
S/o. K. MAHADEVAN (Tafe)
Madras-600 018.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-0. In Public Domain. Digitized by eGangotri

With Best Compliments From :

KAPPA ELECTRICALS

No. 11, MOUNT ROAD,
SAIDAPET MADRAS - 600 015.

Tel : 235 1523 & 235 0159
Tlx : 041 8033 & 041 8902
Grm : 'KAPPA'
Fax : 044 235 1662

MANUFACTURERS OF HIGH VOLTAGE
CURRENT AND POTENTIAL TRANSFORMERS

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Madras Cements Ltd.

RAMCO CEMENT

Registered Office :
'Ramamandiram',
RAJAPALAIYAM - 626 117
(Tamilnadu)

Corporate Office :
V Floor, 98-A, Dr. Radhakrishnan Road,
Post Box No. 641, Mylapore. MADRAS-600 004.
Phone : 830 098

Factories :

JAYANTHIPURAM-521 175
Jaggayapet Taluk
Krishna District. (A.P-)
Ph : Jaggayapet 294, 352

RAMASAMYRAJA NAGAR-626 204
Kamarajar Dt.
(Tamilnadu)
Ph : Virudhunagar, 3396, 3696

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-0. In Public Domain. Digitized by eGangotri

With the Best Compliments From

R. RAGHUNANDAN, F.C.A.,

MANAGING DIRECTOR

Transworld Capital Credit Investments Private Ltd.,

2, V. Krishnaswamy Avenue

Luz, Mylapore Madras-600 004.

INDIA.

Phone : 72592, 76094, Res :71201.

Telex : 041-7579—Swam in.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri



With the Best Compliments From :

Sreenivas & Co.

118, Dr. Radhakrishnan Salai
Mylapore, Madras-600 004.
Phone : 831547, 831584, 83159
Telex : 41-7894. TAN—IN
Fax : (044) 844851

Associated Concern

Srivathsa Industries

52, Ormes Road,
Kilpauk, Madras-600 010.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

''மனதில் உறுதி வேண்டும்

வாக்கினிலே இனிமை வேண்டும்;

நினைவு நல்லது வேண்டும்

நெருங்கினபொருள் கைப்பட வேண்டும்;''

—மகாகவி பாரதியார்

◉

விளம்பர உதவி :

ஏ. பி. டி. பார்சல் சர்வீஸ்

- பொருள் போக்குவரத்து சம்பந்தமான அனைத்து பிரச்சனைகளுக்கும் சுலபமான தீர்வு
  ஏ.பி.டி. பார்சல் சர்வீஸ்
- இருபத்தைந்து ஆண்டுகளாக வணிகப் பெருமக்களின் நம்பிக்கைக்குரிய தேர்வு
  ஏ.பி டி. பார்சல் சர்வீஸ்
- உங்களுக்கு ஏற்றதொரு பார்சல் சர்வீஸ்
  ஏ.பி டி. பார்சல் சர்வீஸ்

எங்களது சேவையை உங்களுக்கும் தொடர

எங்களுக்கு ஓர் வாய்ப்புத் தாரீர் !

குறைந்த கட்டணம் விரைந்த சேவை

ஏ. பி. டி. பார்சல் சர்வீஸ்

10/13-15, காளியங்கராயன் தெரு, ராம்நகர்,

கோவை-*641 009*.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

BRAKES INDIA LIMITED

PADI, MADRAS - 600 050

T.V,S. - GIRLING HEAVY DUTY
BRAKE & CLUTCH FLUID

USE ONLY GENUINE
T. V. S. GIRLING SPARES

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

With the Best Compliments of :

Enterprising Enterprises

THE FIRST FACTORY

IN

INDIA

TO PROCESS GRANITE STONES

With

HIGHLY SOPHISTICATED

IMPORTED MACHINERY

Factory :

Madras-Bangalore Road
ChembarambakKam
Madras-602 107

Phone : 572236, 572141
Gram : Expertise
Telex : 041-25025 Bros in
: 041-24045 Pepl in
Fax : 044-572536

Display centre :

834, Anna Salai
Raheja Complex
Madras-600 002

Phone : 833933
Fax : 4821710

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Pranams at the Lotus Feet of
ANANTA SRI BHARATHI THEERTHA
MAHASWAMIGAL
SRINGERI SARADA PEETAM
From
R. SUBRAMANIAN

Chandrasekar Enterprises

B-221, 67th Street Ashok Nagar,
MADRAS 600 083.
Phone : 4821262

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

With Pranams To
Sringeri Sri Jagadguru

S. Shyam sunder, B. Tech.

Electromech Services

D-1, NAVAGEETHA St., ANTONY ROAD.
CHEMBUR : : BOMBAY-400 071.

MECHANICAL ENGINEERS
TO THE ELECTRONIC INDUSTRY

Specialists in design & Development of :

- ☐ PCBS
- ☐ SPMS
- ☐ Tools, Jigs & Fixtures
- ☐ Spares for Computers & Electronic Instruments
- ☐ New Products.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-0. In Public Domain. Digitized by eGangotri

- For SCHOOL & COLLEGE TEXT BOOK & GUIDES HINDI also : Prathamic, Madyama Rashtrabasha, Pravesika etc;
- For STORY & RELIGIOUS BOOKS in Tamil, English, Hindi & Sanskrit.
- For Quality Note Books, Pencils, Pens, Geo Boxes etc; etc;

Please pay a visit or write to

Agasthier Book Depot

Post Box No. 334 : : Ph : 26061

Nandi Koil St , Teppakulam

TIRUCHIRAPPALLI-620 002.

With Pranams to Sri Sri Jagadguru

Sri Bharathi Theertha Swamigal

From

Worldwide General Agencies

13-A, Thiruvengadam Street,

West Mambalam, Madras-600 033

Phone : 4834‿51, Fax : 4834661

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-0. In Public Domain. Digitized by eGangotri

With best compliments from :

D. SELVARAJ

Rajam Industries

MANUFACTURERS OF

OORVASI

DETERGENT CAKES

41, Azeez Nagar 2nd Street,
Kodambakkam, Madras-600 024
Phone : 423389, 422114

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

With Best Compliments From :

Kappa Consolidated Pvt. Ltd.

No. 11, MOUNT ROAD,
SAIDAPET, MADRAS - 600 015

MANUFACTURERS AND EXPORTERS OF
INSTRUMENT TRANSFORMERS

Tel : 235 0159 & 235 1198
Tlgrm : 'Kappa'
Tlx : 041 8902 & 041 8033
Fax : 044-235 1662

Sri Vidyabharathi Book Centre, Sringeri

ஃ சங்கர பாரதி வெளியீடு

CC-0. In Public Domain. Digitized by eGangotri

ஃ 1200 ஆண்டு கால

ஃ வரலாறு நூலாகிறது

ஸ்ரீ பகவத் பாதர்

முதல்

ஸ்ரீ பாரதீ தீர்த்தர்

வரை

ஆசிரியர் :

பாரதி காவ்லர்

டாக்டர் கே. ராமமூர்த்தி

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri



ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த ஸ்வாமிகளுடன்,
ஜகத்குரு ஸ்ரீ பாரதீ தீர்த்த ஸ்வாமிகள்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

With Pranams to

CC-O. In Public Domain. Digitized by eGangotri

SRINGERI JAGADGURU

Sri Bharathi Theertha Maha Swamigal

C. N. Gowrishankar

CHARTERED ACCOUNTANTS

T-56th Cross Street,
Besantnagar, Madras-600 090.
Phone : 4910864

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-0. In Public Domain. Digitized by eGangotri



ஆரத்தி

Sri Vidyabharathi Book Centre, Sringeri